பொதுசன நூலகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | தை 19 | புதன்கிழமை | (02.02.2011) | பக்கங்கள் 12 | ஓசை - 125

Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
(C349)
SMS your name & course to 772 395 895 & Get Schol.



# யாழ். மக்களிடம் அச்ச உணர்வு மீண்டும் குடிகொண்டுள்ளது

## அதை அகற்றக் கோருகிறார் யாழ். ஆயர்



(யாழ்ப்பாணம்)

**யுத்தத்துக்குப் பிந்திய இன்றைய யாழ்ப்பாணத்தில் அமைதியையும் சமூக நிலையையும் நோக்கி மெல்ல மெல்ல யாழ்ப்பாணம் திரும்பிக்கொண்டிருக்கும் இச் சூழலைக் குழப்பிவிடும் வகையில் யாழ்ப்பாணத்தில் துன்பகரமான சம்பவங்கள் நடந்தேறி வருகின்றன.** **(11 ஆம் பக்கம் பார்க்க)**

## வேட்பு மனுக்கள் நிராகரிப்பு; வழக்காடப்போகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

விரைவில் நடைபெறவுள்ள எம்பிலிப்பிட்டிய நகரசபைத் தேர்தலுக்காக வேட்புமனுப் பத்திரங்களை ஏற்க மறுத்தமைக்கு எதிராக ஆணைகோரும் மனுவொன்றை ஐக்கிய தேசியக்கட்சி நேற்றுத் தாக்கல் செய்தது. ஐ.தே.க.வின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தாக்கல் செய்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)


## பல்கலைக்கழக மாணவர்கள் அனைவருக்கும் மடிக்கணினி

(கொழும்பு)

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவோருக்கு அரசு மடிக் கணினி ஒன்றை வழங்கவுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் ஆங்கில அறிவை விஸ்தரிக்கும் நோக்குடன் இணையம் மூலமான (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை வெற்றி கொள்வதற்கு அதிக விலை கொடுக்கப்பட்டது!



(கொழும்பு)

புலிகளை தோற்கடிப்பதற்காக அதிக விலை கொடுக்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் ரொபர்ட் ஓ பிளக் தெரிவித்துள்ளார். புலிகளை தோற்கடிக்க முடியாது என்ற நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் பொய்ப்பித்த போதிலும், அதற்காக கொடுக்கப்பட்ட விலை மிக அதிகம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்த வெற்றிக்காக பல பொதுமக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். நியூயோர்க் வானொலி நிகழ்ச்சி ஒன்றுக்காக பிரபல தொகுப்பாளர் கிராண்ட் ரியாருக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புலிகளை யுத்த ரீதியாக தோற்கடிக்க முடியாது என பலர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசுடன் கூட்டமைப்பு பேச்சு; மீண்டும் கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான அடுத்த கட்டப்பேச்சுக்கள் மீண்டும் நாளை ஆரம்ப மாகின்றது.

தமிழ் மக்கள் தற்போதைய சூழலில் எதிர்நோக்கும் பிரச்சினை உள்ளிட்ட பல முக்கிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் சார்பில் சிரேஷ்ட அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க, அமைச்சர்களான நிமால் (12ஆம் பக்கம் பார்க்க)

## "தீ வைத்தாலும், கையை வெட்டினாலும் உண்மைகளையே நாம் எழுதுவோம்"

### கொழும்பில் ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் அலுவலகம் தீக்கிரையாக்கப்பட்டமையைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை நண்பகல் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தை ஐந்து ஊடக அமைப்புக்களான இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், சுதந்திர ஊடக அமைப்பு, முஸ்லிம் மீடியா போரம், இலங்கைத் தொழில்சார் ஊடக ஊழியர் தொழிற்சங்க கூட்டமைப்பு,(11ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திர தினத்தில் மெழுகுவர்த்திப் போராட்டம்; அரசுக்கு எதிராக களம் இறங்கும் ஐ.தே.கட்சி

(கொழும்பு)

எதிர்வரும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் புறக்கணிக்கப்போவதாக அறிவித்திருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி அன்றைய தினம் அரசுக்கெதிரான மாபெரும் மெழுகுவர்த்திப் போராட்டம் ஒன்றை நடாத்தப் போவதாகவும் அறிவித்துள்ளது.

சுதந்திர தின விழாவை ஐ.தே.க. புறக்கணிக்கும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க உத்தி


(12ஆம் பக்கம் பார்க்க)

# கே.பி. தலைமையில் புதிய அரசியல் கட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டு புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்குப் புலிகளின் முன்னாள் பிரமுகரான கே.பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதன் முயற்சி எடுத்துவருகிறார்.

இம் முயற்சியின் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளில் கே.பி. தற்போது மிகத் தீவிரமாக இறங்கியுள்ளார். இதற்காக அவர் தற்போது மிகவும் சுறுசுறுப்பாக இயங்கி வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த வாரம் கே.பி.யும் அவரது புலம் பெயர் நண்பர்கள் குழுவும் இணைந்து வடபகுதியில் சூறாவளிச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டனர். வடபகுதி மக்களினது அரசியல் நிலைப்பாடு என்ன என்பது குறித்த நாடித்துடிப்பை அறிந்து கொள்வதற்காகவே கே.பி. குழுவினர் வடபகுதிக்குச் சுற்றுப் பயணம் செய்தனர். இந்த விஜயத்தின்போது யாழ்ப்பாணத்தின் புத்திஜீவிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் மேலும் சிலரையும் கே.பி. குழுவினர் சந்தித்துள்ளனர். அத்துடன்,பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை அவர் சந்தித்துப் பேசியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர் யாழ்ப்பாணத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது - பிரித்தானியா, அமெரிக்கா, (11ஆம் பக்கம் பார்க்க)



# தேவை ஏற்பட்டால் மீண்டும் யுத்த சாட்சியம் பெறுவோம்

## நல்லிணக்க ஆணைக்குழு அறிவிப்பு



(கொழும்பு)

தேவையேற்பட்டால் மீண்டும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களை அழைத்து யுத்த சாட்சியங்களைப் பதிவுசெய்ய நல்லிணக்க ஆணைக்குழு விரும்புவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின்முன் பெறப்பட்ட சாட்சியங்களை பரிசீலனை செய்தல் மற்றும் தரம்பிரித்தல் என்பன தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதென ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசிங்க ஆகியோர் சாட்சியமளித்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவிற்கு ஆயிரக்கணக்கான கடிதம் மூலமான சாட்சியங்களும், வாய் மூலமான சாட்சியங்களும் கிடைக்கப்பெற்றுள்ளதாக லக்ஷ்மன் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

சாட்சிகளைப் பரிசீலனை செய்த பின்னர் தேவைப்படும் நபர்களிடம் மீண்டும் சாட்சியம் பெறுவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், சீரற்ற காலநிலையால் தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட மக்களிடம் சாட்சியம் பெறுதல் பெப்ரவரி நடுப்பகுதியில் இடம்பெறுமென லக்ஷ்மன் விக்கிரமசிங்க கூறினார்.

## இன்று மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

உயரழுத்த மின்மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் காரணமாக இன்று காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

திருத்த வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவும் மின்விநியோகம் வழங்கப்படலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அறிவோர் ஒன்றுகூடல்

(தும்பளை)

புலோலியில் மாதாந்தம் நடைபெறும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்வில் ஓய்வுபெற்ற தமிழ் ஆசிரியரும், சிறந்த சிறுகதைப் படைப்பாளியுமான குப்பிளான் ஐ.சண்முகன் அவர்கள் 'பழந்தமிழ் இலக்கியம்' எனும் பொருள் பற்றி சிறப்புரை ஆற்றவுள்ளார் என நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் இ.து.குலசிங்கம் தெரிவித்துள்ளார்.

மாதந்தோறும் வாரத்தின் முதலாவது ஞாயிற்றுக்கிழமை இவ்வாறான இலக்கியச் சந்திப்பு தொடர்ந்து இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (62)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(காரைநகர்)

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி நாளை மாலை 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் திருமதி நல்லதம்பி பரமசிவம் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் புண்ணியமூர்த்தி ஸ்ரீ விக்னேஸ்வரனும், காரைநகர் தென்மேற்கு கிராம சேவையாளர் செல்வி சிதம்பரப்பிள்ளை திருமகளும், காரைநகர் இலங்கை வங்கி முகாமையாளர் இ.சிவகுமாரனும், காரைநகர் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் அ.கெங்காதரனும், கல்வந்தாழ்வு சனசமூக நிலையத் தலைவர் அ.முரளிதரனும், காரைநகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஆர்.தயாபரனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வின் கௌரவ விருந்தினர்களாக காரைநகர் செல்லப்பா ஸ்ரோர்ஸ் உரிமையாளர் வே.சிற்சபேசன் மற்றும் வியாவில் தேவஸ்தான குருக்கள் சு.சுஜீவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## விபத்தில் குடும்பஸ்தர் பலி

(வடமராட்சி)

பருத்தித்துறை - நெல்லியடி பிரதான வீதியில் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மணல் ஏற்றிவந்த டிப்பர் வாகனத்துடன் மோதி பலியாகியுள்ளார். அவரது துவிச்சக்கர வண்டி பலத்த. சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது. இவ்விபத்தின்போது தம்பசிட்டி வீதி, புலோலியைச் சேர்ந்த செல்லையா தெய்வேந்திரம் (வயது - 50) என்பவரே பலியாகியுள்ளார்.

இவ்விபத்தின்போது காயமடைந்த இவர் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்படும்போது மரணமடைந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (பா,100,52)



கடந்த சில நாட்களாக மட்டக்களப்பில் மீண்டும் பெய்து வரும் அடைமழையினால் தாழ்நில வயல்பகுகளில் மீண்டும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. சமீபத்திய பெருவெள்ளத்திலிருந்து தப்பிப் பிழைத்து அறுவடைக்குத் தயாராகவிருந்த நெல்வயல்கள் அழிவடையத் தொடங்கியுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

(படம் ஏ.எச்.ஏ. ஹூஸைன்)

## ஆடுகளை தின்னும் ஓநாய்

(கரணவாய்)

கெருடாவில் பகுதிகளில் இரவு நேரங்களில் வீடுகளில் வளர்க்கப்படும் வெள்ளை ஆடுகளை ஓநாய் கடித்து உண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதிகளில் ஆடுகளை வளர்க்கும் மக்கள் பெரும் பயப்பீதியுடன் வளர்த்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (18)

## கரவெட்டியில் வீதிகள் புனரமைப்பு

(கரவெட்டி)

கரவெட்டி பிரதேச சபை 50 லட்சம் ரூபா செலவில் ஐந்து வீதிகளைப் புனரமைக்கவுள்ளது.

இமையாணன் வீரகத்தி விநாயகர் வீதி, கரணவாய் கிழக்கு ஜனசக்தி வீதி, துன்னாலை தெற்கு வனம்பில் வீதி, கரணவாய் வடக்கு குலனை பிள்ளையார் வீதி, உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்க வீதி ஆகியனவே இவ்வாறு புனரமைக்கப்படவுள்ளன.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் கரவெட்டி பிரதேச சபை செயலாளர் திருமதி அ.தியாகேஸ்வரி மேற்கொண்டுள்ளார். (100)

## கிழக்குப் பல்கலைக்கழக பேரவை நேற்று கலைப்பு

(கொழும்பு)

கிழக்கு பல்கலைக்கழக பேரவையை கலைத்து விட்டு தகுதிவாய்ந்த அதிகாரியாக திறந்த பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அர்த்தநாயக்க நியமிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் எமது செய்திப் பிரிவிற்கு தெரிவித்தன.

முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் அர்த்தநாயக்க கிழக்கு பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியாக அடுத்த மூன்று மாதங்களுக்கு செயற்படுவார் என அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டன.

இந்த நியமனம் கடந்த ஜனவரி 21 ஆம் முதல் அமுலுக்கு வரும் வகையில் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க வர்த்தமானியில் பிரசுரித்துள்ளார்.

ஏற்கனவே உயர்கல்வி அமைச்சினால் 7 பேரும் பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் பீடாதிபதிகளும் அடங்கிய பேரவை செயற்பட்டு வந்தது. இந்தப் பேரவையை கலைத்துவிட்டே தகுதிவாய்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் மற்றும் உபவேந்தர் ஆகிய பதவிகள் பல வருடங்களாக வெற்றிடமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கரையொதுங்கிய திமிங்கலம் குழிவெட்டிப் புதைப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைகடற் பகுதியில் இறந்த நிலையில் கரையொதுங்கிய திமிங்கலம் பல துண்டுகளாக வெட்டப்பட்டு ஆழ்குழிக் கிடங்கில் நேற்றிரவு புதைக்கப்பட்டது. வெட்டப்பட்ட பாகங்கள் முனைமூர்கம் பகுதியில் புதைக்கப்பட்டன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் உத்தரவினையடுத்து பருத்தித்துறை நகரசபையின் உறுப்பினர்களும், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களும், முனை கடற்றொழிலாளர் சங்கத்தினரும் வடமராட்சி கடற்தொழிற்சங்க சமாசத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து திமிங்கலத்தை அப்புறப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (100)

## சுண்டிக்குளம் அணைக்கட்டு உடைப்பு

(கரணவாய்)

மத்தணி ஜே/366 கிராம சேவையாளர் பகுதியிலுள்ள சுண்டிக்குளத்தின் அணைக்கட்டு உடைந்து வீதியால் நீர் பாய்வதால் அவ்வீதியூடாக போக்குவரத்து செய்யமுடியாது பெரும் இடையூறாக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இதனால் குளமும் வீதியும் ஒன்றாகக் காணப்படுவதாகவும் நடந்து செல்பவர்கள் மிகவும் அவதானத்துடனே செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிட மின்சார வயர்களும் குளத்திற்கு மேலாக செல்வதாகவும், இதனால் மின்சாரத்தின் தாக்கம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இக்குளக்கட்டைப் புனரமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

## குழியில் வீழ்ந்து சிறுமி மரணம்

வவுனியாவில் பாரிய குழி ஒன்றில் வீழ்ந்து சிறுமி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வவுனியா - மகாரம்பைக்குளம் கண்ணன்கோட்டப் பகுதியினைச் சேர்ந்த தாமோதரன் சோபிகா என்ற ஒன்றரை வயது சிறுமியே மரணமானவராவார்.

வவுனியாவில் கடும் மழை பெய்துவருவதன் காரணமாக இவர்களின் வீட்டிற்கு முன்னால் வெட்டப்பட்டிருந்த குழியினுள் வெள்ளம் நிரம்பிக் காணப்பட்டது. இக்குழியினுள் வீழ்ந்தே சிறுமி மரணமடைந்துள்ளார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெற்ற பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது. (மி,39)


## யாழ்ப்பாணம் மாநகர சபை

**வெற்றுக்காணி பொறுப்பேற்றல் சம்பந்தமான அறிவித்தல்**
**ஆதன இல: 567, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, வட்டாரம் 14 இல் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு மேற்குப்பக்கமாக ஆதன இல: 567 இற்குரிய ஆதனம் பராமரிப்பின்றி பற்றைகள் வளர்ந்து சுகாதாரத்திற்கு கேடு விளைவித்தும், நுளம்புப் பெருக்கத்திற்கு ஏற்றவகையிலும் இருப்பதனால், இதனை யாழ்ப்பாணம் மாநகர சபை 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்புப் பெருக்கத் தடைச் சட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி செய்யத் தீர்மானித்துள்ளது.

இவ்வாதனத்தின் மீது எவராவது உரிமை கொண்டாட இருப்பின் 15.02.2011 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறின் ஆதனம் யாழ்ப்பாணம் மாநகர சபையின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு பரிபாலிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**திருமதி யோ.பற்குணராஜா**
(சி/502) **முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

உங்கள் வாழ்க்கை மனிதத்தன்மையுடன் கூடியதாக இருக்கவேண்டும். அப்படி இருக்க நீங்கள் விரும்பினால் சுரண்டல் வாழ்வை சுட்டெரியுங்கள். சுபீட்சமான வாழ்க்கையை நிர்ணயித்துக் கொள்ளுங்கள்.
- மாஜினி -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

## கோரிக்கை நிறைவேறுமா?

வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவில் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் இன்னமும் பெரும் பாலான கிராம அலுவலர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை.

மீளக்குடியமர்த்தப்படாத இம்மக்கள் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ள முகாம்களிலும், நண்பர்கள், உறவினர் வீடுகளிலும் சிரமங்களின் மத்தியில் வாழ்க்கையை நகர்த்தி வருகிறார்கள்.

இவர்களில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வந்த கடற்றொழிலாளர் குடும்பங்களில் பெருமளவானோர் தொழில்வாய்ப்பை நோக்கமாகக்கொண்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் குடியமர்ந்து தமது ஜீவனோபாயத்திற்காக கடற்றொழிலில் ஈடுபட்டு காலத்தைக்கழித்து வந்தனர்.

யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து சொந்தப்பிரதேசத்திற்கு திரும்பிய இம்மக்கள் தம்மை சொந்தக்கிராமங்களில் குடியேற்றுமாறும், காணிகள் அற்ற மக்களுக்கு காணிகள் வழங்குமாறும் கோரிவருகின்றனர்.

வலி.வடக்குக்கடற்கரையோரமாக பருத்தித்துறை- பொன்னாலை வீதியில் இளவாலை மேற்கை எல்லையாகவும் பருத்தித்துறை, ஊறணி, மயிலிட்டி, காங்கேசன்துறை, வலித்தூண்டல், சேந்தாங்குளம், வரையிலான சுமார் 15 கிலோமீற்றர் நீளமான கடற்பிரதேசத்தில் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த இம் மக்களை முகாம்களுக்குள் முடக்கி வைத்திருப்பது பாரதூரமான செயலாகும்.

இத்தொழிலில் பரம்பரை பரம்பரையாக ஈடுபட்டு வந்த மக்கள் விவசாயச் செய்கையிலோ மற்றும் கூலித்தொழில்களிலோ ஈடுபடுவார்கள் என்று கூறமுடியாது.

அப்படி அவர்கள் மாற்றுத்தொழில்களில் ஈடுபடுபவர்களாக இருந்திருந்தால் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு ஓடிச்சென்றிருக்கமாட்டார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்நிலையில், அவர்களது வாழ்வாதாரத்தையும், கடற்றொழில் நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படவேண்டும்.

இந்த மக்கள் சொந்தக்கிராமங்களில் மீளக்குடியமர்த்தப்படுவார்களாக இருந்தால் குடாநாட்டின் கடல் வளத்தின் பொறுமானங்களை அவர்கள் அனுபவிக்கக்கூடியதாக இருக்கும்.

இம்மக்களது நிலைமைகள், தேவைகள், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளை விலாவாரியாக விபரித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும். அதன் பிரதிகளை சம்பந்தப்பட்ட கடற்படை கட்டளைத்தளபதிகளுக்கும் மயிலிட்டித்துறை கடற்தொழிலாளர்கூட்டுறவுச்சங்கம் அனுப்பிவைத்துள்ளமையையும் இங்கு சுட்டிக்காட்டுவதுடன், அதற்கு உரிய நடவடிக்கைகளையும் சம்பந்தப்பட்டவர்கள் எடுக்கவேண்டுமென வற்புறுத்திக்கூறுகிறோம்.

இவர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகான சம்பந்தப்பட்டவர்கள் முற்படும் போது பலாலி விமா நிலைய விஸ்தரிப்புக்கென சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு நஷ்டஈடு மற்றும் காணிகளை இழந்தவர்களுக்கு பொருத்தமான இடத்தில் காணிகள் வழங்கி வீடுகளை நிர்மாணித்துக்கொடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்றும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

-ஆசிரியர்.

# பணத்திற்குப் பதிலான மனிதாபிமான சேவை வைத்தியர்கள் முன்னுரிமை அளிக்கவேண்டும்

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள்


AFP/GETTY IMAGES

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் பணிபுரிவதென்பது தவறல்ல. ஆனால் பணத்திற்குப் பதிலாக, மனிதாபிமானச் சேவைக்கு வைத்தியர்கள் முன்னுரிமை அளிக்க வேண்டுமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 844 வைத்தியர்களுக்கு, அரச வைத்திய சாலைகளில் பணிபுரிவதற்கான நியமனங்களை வழங்கி வைத்தபின், உரையாற்றுகையிலேயே அவர் மேறகண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றும் சில வைத்தியர்கள், முதல் 25 பேரிடம் 2500 ரூபா வீதமும், அடுத்த 25 தொடக்கம் 50 பேரிடம் 5,000 ரூபா வீதமும், அடுத்த 50 தொடக்கம் 75 வரையானோரிடம், 7500 ரூபாவும் கட்டணமாக அறவிடுகின்றனர். தவிர விசேடமாக வைத்தியரை நோயாளி எந்தநேரமும் சந்திப்பதென்றால் பத்தாயிரம் ரூபாவை அறவிடுகின்றனர். ஆனால் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

நான் விவசாயத்துறை அமைச்சராக இருந்தவேளை, காய்ச்சலினால் பீடிக்கப்பட்டேன். அவ்வேளை ஒரு வைத்தியரிடம் சிகிச்சை பெற்றேன். எனினும் இன்றுவரை நான் குணமடையவில்லை. எனது நண்பனொருவனின் வேண்டுகோளுக்கிணங்க மற்றொரு வைத்தியரிடம் ஆலோசனை பெறச் சென்றேன். அவருக்கு என்னை நன்றாகத் தெரியும். அவருடன் சிகிச்சை குறித்து ஆலோசனை நடத்திய பின்னர், வெளியே வந்து நண்பரிடம் எவ்வளவு கட்டணம் அறவிடப்பட்டது எனக் கேட்டேன். அவர் 8,000 ரூபா எனத் தெரிவித்தார். அப்போது நான் அதிர்ச்சியடைந்தேன். இதன்போது நான் வறிய அப்பாவி மக்கள் குறித்து சிந்தித்துக் கவலையடைந்தேன்.

சிலர் பணத்திலேயே எல்லாம் தங்கியிருப்பதாக நினைக்கின்றனர். ஆனால் அது தவறு. பணத்தைக் கொண்டு எல்லாவற்றையும் வாங்க முடியாது. எல்லாவற்றையும் செய்யவும் முடியாது. வைத்தியர்களில் இருவகையினர் உண்டு. அவர்களில் ஒருவகையினரைத் தெய்வங்கள் என அழைக்கலாம். அவர்கள் மனிதாபிமானத்துடன் இரக்க வழியில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பவர்கள். ஏனையோர் பேய்கள் (devils) என அழைக்கப்படுவர்.

இந்தநாட்டின் பொருளாதாரத்திற்கான அப்பாவி மக்கள் கடுமையாக உழைக்கின்றனர். அவர் கள்தான் இந்த நாட்டின் அமைச்சர்கள், வைத்தியர்கள் கல்வியாளர் களை உருவாக்குகின்றார்கள்.

சுகாதாரவளம் மிக்க தேசமாக எமது நாட்டைக்கட்டியெழுப்பும் பாரிய கடமை வைத்தியர்களிடமே உள்ளது. ஆசியாவின் முன்மாதிரியாக எமது நாட்டின் சுகாதார சேவையை முன்னேற்றுவதற்கான சகல உதவிகளையும் வைத்தியர்களுக்குச் செய்து தருவேன் என அவர் மேலும் தெரி வித்தார்.

# கிரவல் மண் பரப்பப்படாமையால் பயணம் செய்வதில் கடும் சிரமம்

(கிளிநொச்சி)

உருத்திரபுரம் பகுதியிலுள்ள பிரதான வீதியிலிருந்து 5ஆம் குறுக்கு வரை செல்லும் வீதியில் 2கிலோமீற்றர் தூரத்திற்கு கிரவல் மண் பறிக்கப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்டுவருகிறது.

இதில் 1கிலோ மீற்றர் தூரத்திற்கே இந்தக் கிரவல் மண் பரப்பப்பட்டு வீதி சீர்செய்யப்பட்டு வந்த நிலையில் மிகுதி 1 கிலோ மீற்றர் தூரத்திற்கான கிரவல் மண் பரப்பப்படாமல் புனரமைக்கப்படாது காணப்படுவதாகவும் இதனால் போக்குவரத்தை மேற்கொள்வதில் சிரமங்கள் எதிர்நோக்குவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதைவிடப் பாடசாலை மாண வர்கள் அதிகளவில் இவ்வீதியால் பயணம் செய்வதாகவும் தற்போது இவ்வீதியால் பயணம் செய்ய முடியாமல் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக் குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவித்தும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இனியாவது இவ்வீதியைச் செப்பனிடும் நடவடிக்கை குறித்துக் கவனம் எடுக்குமாறும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

# வேலணையில் நினைவு நிகழ்வு

(அரியாலை)

மூத்த தமிழ் அறிஞரும் முன்னாள் நாடாளுமன்ற உறப்பினருமாக இருந்து சேவையில் ஈடுபட்டவருமான வேலணையூர் பண்டிதர் கா.பொ.இரத்தினம் அவர்களின் 42ஆம் நாள் நினைவஞ்சலியும் சேவை நினைவு கூர்நிகழ்வு விழாவும் வேலணையில் நடைபெற உள்ளதாக விழா ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு அன்னாரது வேலணை இல்லத்தில் வங்க ளாவடிக்கு அண்மையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

கா.பொ. இரத்தினம் அவர்கள் ஆண்டுதோறும் ஊர்ஊராகத் திருக்குறள் ஆய்வு மாநாடுகளை நடத்தி தமிழ்ப் பணிபுரிந்தவர். இந்தியாவில் இருந்தும் அறிஞர்களை வரவழைத்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (23)

- ஊடகவியலாளர் எக்னலிகொட மாயம் -

# கணவனை கண்டுபிடிக்க மனைவி ஐ.நா. செயலருக்கு கடிதம்

காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொடவின் மனைவியினால் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கு அனுப்பப்பட்ட கடிதம் கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு கிடைத்துள்ளதாக ஐ.நா. அலுவலகம் அறிவித்துள்ளது.

திருமதி சந்த்யா எகனலிகொடவினால் கையளிக்கப்பட்ட மகஜர் குறித்து தமக்குத் தெரியாது என நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மார்ட்டின் நேசிர்க்கி முன்னர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கொழும்பிலுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி நீல் புஹ்னேவுக்கு இம்மகஜர் கிடைத்திருப்பதாக ஐ.நா.வின் கொழும்பு அலுவலகம் டெய்லி மிரருக்குத் தெரிவித்துள்ளது. ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, தனது கடிதத்துக்கு ஐ.நா. செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் ஐ.நா.வின் பதிலுக்காக காத்திருப்பதாகவும் திருமதி எக்னலிகொட தெரிவித்தார்.

# வறிய நிலையிலுள்ள மக்களுக்கு உதவிகளை வழங்கும் படையினர்

(சாவகச்சேரி)

சாவகசசேரிப் பகுதியில் மிகவும் வறியவர்களுக்கு 50 துவிச்சக்கர வண்டிக ளையும், தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்த 50 சி.டி.எம.ஏ தொலைபேசிகளையும் வழங்குவதற்கு நுணாவிலிலுள்ள 523 பிரிகேட் நடவடிக்கை எடுத்துள் ளது.

இதேவேளை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில்1.3 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களை யாழ்மாவட்டப் படைத்தலைமையகம், மககளுக்கு வழங்கியுள்ளது.

நுணாவிலில் அமைந்துள்ள 523 ஆவது பிரிகேட்டின் பொறுப்பதிகாரி பிரிகேடியர் பிரபாத் தெமத் தமபிட்டிய தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க கலந்து கொண்டு இந்தப் பொருட்களை வழங்கினார்.

இதில் 100 மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், பேனை, பென்சில்கள் உட்பட்ட பொதிகளும், தெரிவு செய்யப்பட்ட பத்துக் குடும்பங்களுக்கு 100 கோழிக் குஞ்சுகளும், 345 குடும்பங்களுக்கு, உயர்ரக தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வீதிப்போக்குவரத்துச் சட்ட விதிகளை மாணவர்கள் அறிந்திருத்தல் அவசியம்

## போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு சார்ஜன்ட் அறிவுறுத்து

(யாழ்.நிருபர்)

யாழ்.குடாநாட்டில் வாகனப்போக்குவரத்து நெருக்கடி அதிகரித்துள்ள அதேவேளையில் வீதி விபத்துக்களும் அதிகரித்து வருகின்றன. பாடசாலை மாணவர்கள் வீதிப் போக்குவரத்துச் சட்ட விதிகளை அனுசரித்து நடப்பதன் மூலம் வீதி விபத்துக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

இவ்வாறு கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான வீதிப் போக்குவரத்து விதிகள் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்திய யாழ்.தலைமை பொலிஸ் நிலையப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு சார்ஜன்ட் சுனில் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் சு.சண்முககுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், கோண்டாவில் பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளின் உயர்வகுப்பு மாணவர்கள் கலந்துகொண்டனர்.

போக்குவரத்துப் பொலிஸ் கண்காணிப்புப் பிரிவு சார்ஜன்ட் தொடர்ந்து பேசுகையில்-

மாணவர்கள் வீதியில் நடந்து செல்லும்போது எந்தப் பக்கமாகச் செல்ல வேண்டும் என்பதை அறியாதவர்களாயும், அறிந்தவர்கள் அதன்படி நடக்காத நிலையுமே யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்றது.

வீதியில் நடந்து செல்லும்போது வலது பக்கமாக நடந்து செல்ல வேண்டும். அப்போதுதான் முன்னுக்கு வரும் வாகனத்தைப் பார்க்கக் கூடியதாகவும் வீதி விபத்தைத் தவிர்க்கக் கூடியதாகவும் இருக்கும்.

வீதியைக் கடந்து செல்லும்போது மஞ்சள் கோட்டின் ஊடாகக் கடக்க வேண்டும். மஞ்சள் கோடு இல்லாத இடங்களில் வீதியைக் கடக்கும்போது வலது கையை உயர்த்திக் காட்டிக்கொண்டு நடக்க வேண்டும். வீதியைக் கடக்கும் போது குறுக்காக ஓடக்கூடாது, நடந்து செல்ல வேண்டும்.

துவிச்சக்கர வண்டியில் செல்லும் போது சமாந்தரமாகவோ, கூட்டமாகவோ செல்லக்கூடாது. ஒருவர்பின் ஒருவராகச் செல்ல வேண்டும். துவிச்சக்கர வண்டிகளுக்கு கட்டாயம் பிறேக் இருக்க வேண்டும். பெல், டைனமோ, மக்காட் கல் என்பன அவசியம் இருக்க வேண்டும்.

17 வயதுக்குக் குறைந்தவர்கள் துவிச்சக்கர வண்டி ஓட்டுவதற்கு சட்டத்தில் இடமில்லை. யாழ்மாவட்டத்தில் பெருமளவு மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளில் பாடசாலைகளுக்குச் செல்வதால் நாம் இதனைக் கருத்திற் கொள்வதில்லை. எனினும் வயது குறைந்தவர்களும் கட்டையானவர்களும் துவிச்சக்கர வண்டி ஓட்டுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் கையடக்கத் தொலைபேசிகளைக் பாடசாலைகளுக்குக் கொண்டுவர முடியாது. கையடக்கத் தொலைபேசி பாவித்துக்கொண்டு துவிசசக்கர வண்டி மற்றும் வாகனங்களைச் செலுத்துவோரையும், வீதியில் சமாந்தரமாகத் துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போரையும் நாம் கைது செய்வோம.

இவ்வாறு கைது செய்யப்பட்டோரை நாம் நீதிமன்றம் கொண்டு சென்றால் பாடசாலைக் காலத்தில் நீதிமன்றம் சென்றதற்கான பதிவு உங்களின் எதிர் காலத்தைப் பாதிக்கும் என்பதை நீங்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.இராணுவத் தலைமையகப் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு அதிகாரி மேஜர் லியனகேயும் கலந்துகொண்டார். தொடர்ந்து மாணவி உ.றசிந்தா நன்றி தெரிவித்து உரை நிகழ்த்தினார். (10)

# மெய்வல்லுநர் போட்டிகள்

(யாழ்.நிருபர்)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பி.ப.2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ந.சபாரத்தினசிங்கி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ம.சரவணபவ ஐயர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி அலகு விரிவுரையாளர் திருமதி ச.ஜெயானந்தகுமாரி, சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் ச.சர்வானந்தன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (10)

☆ ☆ ☆ ☆

(தெல்லிப்பளை)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வு நாளை வியாழக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு இடம்பெறும்.

கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்திச் சபை அலுவலர் எஸ்.ஜெயானந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசிலை திருமதி ராஜேஸ்வரி பத்மநாதன் வழங்கிக் கௌரவிப்பார். (44)

# பணப்பரிமாற்றக் கருமபீடம் இலங்கைவங்கி நடவடிக்கை!

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை வளாகப்பகுதியில் இலங்கை வங்கியின் பணமாற்று இயந்திர கருமபீடமும் மற்றும் அலுவலகம் ஒன்றும் அமைப்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கை வங்கி ஈடுபட்டுள்ளது.

இதற்கென நல்லூரில் யாழ் மாநகர சபை அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தில் பொருத்தமான பகுதியில் இவற்றை அமைப்பதற்கு இலங்கை வங்கியினர், யாழ் மாநகரசபையினரின் அனுமதியைக் கோரியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதற்கான பூர்வாங்க வேலைகள் முடிவடைந்ததும் இவை அமைக்கப்படும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இப்பகுதியில் இலங்கை வங்கியின் எந்தக் கிளைகளும் இல்லாமையினால் மக்கள் யாழ்நகரிற்கே செல்லவேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# வருகை தரவும்

(தெல்லிப்பளை)

மகாஜனக்கல்லூரியில் இருந்து இரண்டாவது தடவையாக க.பொ.த. உயர்தரப் பரீட்சை 2011க்கு பழைய பாடத்திட்டத்தில் தோற்றவுள்ள மாணவர்களிடம் இருந்து கல்லூரி அதிபர் விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

பாடசாலை ஊடாக இரண்டாந்தடவையாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைக்கு வருகை தந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (44)

# நூல் அறிமுக விழா


(தெல்லிப்பளை)

உ.கு.ம இளவரசர் இராசசேகரின் சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம் என்னும் நூலின் அறிமுகவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு சுன்னாகம் சிவன்கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மருத்துவத் தவிசாளர் கலாநிதி பொன்.இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் நூலின் நயவுரையை மருத்துவக் குழுச்செயலாளர் வைத்திய கலாநிதி இ.கனகலிங்கமும், ஆராய்ச்சியாளர் வைத்தியகலாநிதி திருமதி செ.விக்னவேணி, இ.சி.ஆ.ம. கல்லூரி விரிவுரையாளர் வைத்திய கலாநிதி எச்.சிவயோகமலர் ஆகியோர் நிகழ்த்துவர்.

முன்னாள் மாகாணப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி பூ.உரோமகேசுவரன், மருத்துவக்குழுச் செயலாளர் வைத்திய கலாநிதி இ.கனகலிங்கம், அமரரான வைத்திய கலாநிதி செ.து. சண்முகராசா, சோதிடர் ஆ.சண்முகலிங்கம் ஆகியோர் அவர்களது சேவையின் பொருட்டு பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஏற்புரையை நூல் ஆசிரியர் பேரறிஞர் க.பாலசுப்பிரமணியம் வழங்கவுள்ளார். (44)

# காந்தீயத்திற்கு சுருதகேவலி இலக்கிய விருது




உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க விருது 2010/2011 இலங்கையிலிருந்து வெளிவரும் காந்தீயம் இதழுக்குக் கிடைத்துள்ளது. உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க 6ஆவது மாநாடு கடந்த 5ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றபோது இவ்விருது வழங்கப்பட்டது. ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் கருத்தரங்கு மண்டபத்தில் இடம்பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் திருவண்ணாமலையைச் சேர்ந்த 'சுருதகேவலி' இதழாளர் பார்சுவநாதன், தமிழ் தொண்டாளர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோரிடமிருந்து 'காந்தீயம்' இதழாசிரியர் எம்.ஷாந்தன் சத்தியமூர்த்தி விருது பெறுவதையும், அருகில் பேராசிரியர் சபா.ஜெயராசா மற்றும் உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்கத் தலைவர் வதிலை பிரபா ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# 20 வருடங்களுக்குப் பின்னர் புனரமைக்கப்படும் ஆலயம்

(யாழ்.நிருபர்)

கடந்த முப்பபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற யுத்த நடவடிக்கைகளினால் முற்றுமுழுதாகச் சேதமாக்கப்பட்டிருந்த காரைநகர் துறைமுகம் பிள்ளையார் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

1991 இல் காரைநகரில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த பின்னர் கடற்படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக இருந்த இவ்வாலயச் சூழல், கடந்த வருடம் மேற்கு வீதியால் துறைமுகத்திற்குப் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்ட பின் ஆலயப் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆலயத்தை முற்றுமுழுதாகப் புதிதாகக் கட்டவேண்டியுள்ளதால் திருப்பணி வேலைகளுக்கு இரண்டு கோடி ரூபாவுக்கு மேல் செலவாகும் எனக் கூறப்படுகிறது. (10)

# கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது 85 பாடசாலைகள் இயங்குகின்றன

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 103 பாடசாலைகளில் 85 பாடசாலைகள் தற்போது இயங்கிவருவதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தெரிவித்தார்.

இதன்படி கரைச்சி கல்விக்கோட்டத்தில் 36 பாடசாலைகளும், பூநகரி கல்விக் கோட்டத்தில் 20 பாடசாலைகளும், கண்டாவளைக் கல்விக்கோட்டத்தில் 18 பாடசாலைகளும், பளைக்கல்விக் கோட்டத்தில் 11 பாடசாலைகளுமாக மொத்தம் 85 பாடசாலைகள் இயங்கி வருகின்றன.

அத்துடன் கண்டாவளைக் கல்விக் கோட்டத்திலுள்ள முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயமும், கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவும் கடந்த சிலதினங்களுக்கு முன்னர் இயங்க ஆரம்பித்துள்ளன. மக்கள் மீள்குடியேற்றப்படாத பகுதிகளிலுள்ள பாடசாலைகளே, கல்விச் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்காக இதுவரை திறக்கப்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கல்வி அமைச்சின் 1000 பாடசாலைத் திட்டத்தின்கீழ் இயங்காத பாடசாலைகளை செயற்படுத்தவேண்டும்

## தீவக வலயக் கல்விப் பணிப்பாளர்



(யாழ்.நிருபர்)

காரைநகரில் 16 பாடசாலைகள் இருந்தபோதும், தற்போது 9 பாடசாலைகளே இயங்கி வருகின்றன. எனினும், கல்வி அமைசசின் ஆயிரம்பாடசாலைகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தில் இயங்காத சில பாடசாலைகள் திறக்கப்படவேண்டியுள்ளது என தீவக வலய கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

காரைநகர் யாழ்ரன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஆயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் திறக்கப்படவுள்ள பாடசாலைகளுக்கென தனியான கோட்டமொன்றை அமைக்கவுள்ளோம். அதைப் பாதுகாப்பது மாணவர் கடமையாகும். முன்பு பாடசாலைப் பொருட்களைச் சேதம் செய்பவர்களுக்குத் தணடனை வழங்கப்பட்டது. அந்நிலை தற்போது இல்லை. அதனால் மாணவர்கள் தாங்களே உணர்ந்து பாடசாலை உபகரணங்களையும், சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டும்.

நாம் இப்பகுதிப் பாடசாலைகளுக்கான கல்வி மேம்பாட்டிற்கு வேண்டிய உதவிகளை உரிய நேரத்தில் வழங்கிவருவதுடன், காரைநகருக்கும் தனியான கல்விக்கோட்டத்தையும் அமைத்துக் கொடுத்துள்ளோம்.

எங்கள் பகுதிக்கென ஒதுக்கப்பட்ட தொழில் நுட்பங்களுக்கான நிதி திட்டமிடப்படாததினால் திரும்பிச் சென்றுள்ளது. அந்த நிதியை மீண்டும் பெற்றுத் தருவோம். 2010 ஆம் ஆண்டு 5 ஆம் ஆணடு புலமைப் பரிசில் பரீட்சையில் தீவகம் முழுமையாக 13 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அதில் காரைநகர் மாணவர்கள் ஆறுபேர் திறமைச் சித்தி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2010 ஆம் ஆண்டு 100 புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் தீவகத்தில் 52 சதவீதமாகும். இவ்வாண்டு உயர்தரப் பெறுபேறுகளும் முன்னேற்றம் கண்டுள்ளது.

தொடர்ந்து மாணவர்கள் தங்கள் திறமையைக் காட்ட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (50)

# கிழக்கு மாகாண வெள்ள அனர்த்தம் யாழ்.மாநகரசபை 2 லட்சம் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட கிழக்கு மக்களுக்கு உதவவென யாழ். மாநகரசபை இரண்டு இலட்சம் ரூபாவை வழங்கவுள்ளது.

யாழ் மாநகரசபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்டின் முதல் மாத இறுதிக் கூட்டத்தின்போது இதற்கான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலையில் நடைபெற்ற இக் கூட்டத்தின் போது அண்மையில் கிழக்குமாகாணத்தில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக மக்கள் பலர் கொல்லப்பட்டும் பல லட்சம் மக்கள் இடம் பெயர்ந்தும் வீடுகள், உடமைகள் அழிவடைந்தும் மிகமோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டன. எனவே இம் மக்களின் துயர்துடைக்கவென யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், வர்த்தகர்சங்கம், யாழ். அரச செயலக ஊழியர்கள் தமது உதவிப்பொருட்களை கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பியிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து யாழ் மாநகர சபையும் இரண்டு இலடசம் ரூபாவை யாழ் அரச அதிபர் ஊடாக கிழக்கு மாகாண மக்களுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் சபையில் கொணடு வந்த இத்தீர்மானத்தை யாழ் மாநகர சபையின் உதவி மேயர் றீகன் (இளங்கோ) அவர்கள் வழிமொழிந்ததன் பேரில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (52,பா)

# பிரதம வைத்திய அதிகாரி இன்மையால் சிகிச்சை பெறுவதில் நோயாளர் சிரமம்

(யாழ்.நிருபர்)

காரைநகர் அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஒருமாத காலமாகப் பிரதம வைத்திய அதிகாரி இன்றி நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இங்கு மிகச் சிறப்பாகக் கடமையாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ள இஸ்லாமிய வைத்திய அதிகாரி இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை.

தினமும் 100- 125 நோயாளிகள் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற வ்ருகின்றனர். ஆண், பெண் விடுதிகள் மற்றும் பிரசவ விடுதி என்பவற்றிலும் நோயாளர் தங்கிச் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அனைத்து வைத்திய சேவைகளுக்கும் இரவு, பகல் கடமையாற்ற ஓய்வுபெற்று மீள்நியமனம் பெற்ற ஒரேயொரு உதவி வைத்தியர் மாத்திரமே இங்கு சேவையாற்றுகிறார்.

பிராந்திய சுகாதார திணைக்களம் இவ்வைத்தியசாலைக்குப் பிரதம வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்க விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)

# பொறுப்பற்ற முறையில் நடக்கும் பொதுமக்கள்

(கொக்குவில்)

புல்லுக்குளத்தில் இருந்து பெரும்படியான கழிவுப் பொருட்கள் வெளியே எடுத்துப்போடப்பட்டு வருகின்றன.

வெற்றுப் போத்தல்கள் மற்றும் சொப்பிங் பாக்குகள் குடிநீர் அடைத்த காலி உறைகளென புல்லுக்குளத்துள் மக்களால் பொறுப்பற்ற முறையில் போடப்பட்ட கழிவுகளே பெரும்பாலும் அவற்றுள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணத்திற்கு வருகைதரும் யாத்திரிகர்களைக் கவரும் விதத்தில் புல்லுக்குளத்தை புனரமைக்க யாழ்.மாநகரசபை பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்து வருவது தெரிந்ததே.

அந்த வகையில் கடந்த காலங்களில் சல்பீனியாக் கொடிகள், தாமரை போன்ற தாவரங்களை வேரோடு அகற்ற மாதங்கள் சில ஆகின. மேலும் புல்லுக்குளத்தில் சேரும் கழிவுநீரை சுத்திகரித்து அழகு படுத்தும் முயற்சிகள் தொடர்வதை அவதானிக்கமுடிகிறது. (68)

# சின்னஞ்சிறு செய்திகள்

## மணவாளக்கோலம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை மேற்கு அருள்மிகு ஸ்ரீ வதரிபீட மன்றுளாடும் விநாயகர் தேவஸ்தானம், பழனியாண்டவர் தேவஸ்தான மணவாளக் கோல சங்காபிஷேக திருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் கும்பாபிஷேக பிரதிதின மணவாளக் கோல சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து அன்னதானமும் அதனைத் தொடர்ந்து மாலை தெருவீதி திருவிழாவும் இடம் பெறவுள்ளது. (52)

## தனியார் பஸ்ஸில் தாலிக்கொடி திருட்டு

(ஆனைக்கோட்டை)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி தனியார் பஸ்ஸில் சென்ற பெண்ணின் பிரயாணக் கைப்பையிலிருந்து தாலிக்கொடியும் காப்பும் களவாடப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நவாலியைச் சேர்ந்த 62 வயதுடைய பெண் தனது கணவர் பிள்ளைகளுடன் கொழும்பு செலவதற்காக தனியார் பஸ்ஸில் புறப்பட்டுச் சென்று மதவாச்சிப் பகுதியில் தனது பிரயாணப்பையைப் பார்த்தபோது அதிலிருந்த தாலிக் கொடியும் காப்பும் களவாடபபட்டுள்ளமை தெரிய வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

## கருத்தரங்கு

(கொக்குவில்)

காரைநகர் கலாநிதி தியாகராசா மகா வித்தியாலயத்தில் இன்று புதன்கிழ்மை யாழ். சமாதானத்திற்கும், நல்லிணக்கத்துக்குமான பணியகத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் கருத்தரங்கு நடைபெறவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நண்பகல் 12 மணியிலிருந்து பிற்பகல் 2 மணிவரை நடைபெறும் கருத்தரங்கில் வித்தியாலய தரம் 5 மாணவர்களுக்கு சமாதானக் கல்வி என்னும் பொருளிலும் ஆசிரியர்களுக்கு சமாதானக் கட்டுமானம் எனும் பொருளிலும் கருத்தரங்குகள் பணியக செயற்பாடடாளர்களால் நடத்தப்படவுள்ளன. (68)

## நாவலர் மண்டபம் விரைவில் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையினால் விரைவில் நாவலர் கலாசார மண்டபம் மெருகூட்டப்படவுள்ளதாக யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவிததார்.

நேற்றுமுன்தினம் யாழ். மாநகரசபையில் நடைபெற்ற மாத இறுதிக் கூட்டத்தின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபையினால் நிர்வகிக்கப்படும் இந் நாவலர் மண்டபத்தில் பல்வேறு வகையான நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. எனவே இம் மண்டபத்தை மெருகூட்டவேண்டிய உள்ள தாகச் சுட்டிககாட்டப்பட்டது. (பா)



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் தரம் 1 மாணவர்களின் கால்கோள் விழாவில் அதிபர் சு.சண்முககுமார் தேசியக் கொடியேற்றுவதையும் கலந்துகொண்ட புதிய மாணவர்கள் மற்றும் விருந்தினர்களைப் படங்களில் காணலாம். (10)

## இன்றைய பலன்

02.02.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி தை 19

இராகுகாலம் 12.36– 2.06, சுபநேரம் 5.06 –6.36, சதுர்த்தசி காலை 7.10, உத்தராடம் பி.ப1.20, அமிர்த சித்தம், அமாவாசை விரதம்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

–ஆதினி–

மேடம்:– காரிய தாமதம், பணமுடை, சினம் அதிகரித்தல்.

ரிஷபம்:– சுபகாரியக் களிப்பு, பணச் செலவு, காரியஜெயம்.

மிதுனம் :– இனசனச் சேர்க்கை, எதிர்பாலார் உதவி, காரிய நன்மை.

கடகம்:– யோசனை மிகுதி, பொருள் இழப்பு, நிம்மதிக் குறைவு.

சிம்மம்:– காரியத்தில் விரோதம், நண்பர் பகை, அகால போசனம்.

கன்னி :– உடல் உபாதை, மருத்துவச் செலவு, வீண்பயம்.

துலாம் :– எதிர்பாராத வரவால் மகிழ்ச்சி, இனசனக் கொண்டாட்டம், ஆலய தரிசனம்.

விருச்சிகம்:– தேகநலன் விருத்தி, போசன சுகம், பெண்களால் உதவி.

தனுசு:– மேன்மையான நிலை, போட்டிகளில் வெற்றி, சுபநிகழ்ச்சி நடத்தல்.


மகரம்:– காரியத்தடை, பகைவர்கள் முனைப்பு, தடுமாற்றம்.

கும்பம் :– நினைத்த காரியம் சித்தி, உறவினர் உதவி, நற்செய்தி கிடைத்தல்.

மீனம்:– நண்பர் விரோதியாதல், பெற்றோர் வெறுப்பு, காரியத்தடை.

# எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் திருடர்களுக்கு வாக்களிக்க வேண்டாம்

## என்கிறார் அமைச்சர் குணசேகர



(கொழும்பு)

திருடர்களுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும் கள்வர்களுக்கு மக்கள் வாக்களிக்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார். மாதாந்தம் 5000 ரூபா கொடுப்பனவை உழைக்கக் கூடிய உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் பதவிக்காக ஏன் சிலர் மில்லியன் கணக்கான ரூபாவைச் செலவிடுகின்றனர் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மஹரகம பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு அதிகளவில் பிரசாரத்திற்காக செலவு செய்வோர் அதிகாரத்தைக் கைப்பற்றுவதனை விடவும், களவாடுவதற்கு முயற்சி செய்கின்றமை புலனாவதாக அவர் தெரிவித்தார்.

மோசடி செய்வார்கள் என எதிர்பார்க்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வேட்பாளர்களுக்கும் மக்கள் வாக்களிக்கக் கூடாது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## முன்னணி பாதாளக் குழு உறுப்பினர்கள் கொழும்பில் நேற்றுக் கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

கொழும்பின் முன்னணி பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் இருவர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொழும்பு பாதாள உலக கும்பல்களின் முன்னணி உறுப்பினர்களான முகத்துவாரம் (மோதர) இந்திரா மற்றும் மாளிகாவத்தை மல்லா ஆகியோரே கடத்தப்பட்டுள்ளவர்களாவர். இந்திரா மீதொட முல்லையில் வைத்தும் மல்லா மாளிகாவத்தையில் வைத்தும் கடத்தப்பட்டுள்ளனர்.

கிம்புலாஎல குணா என்பவரின் பிரதான சகாவான மோதர இந்திரா கொலைச் சம்பவங்கள் மற்றும் போதைப் பொருள் விநியோகம் போன்ற பாரிய குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் என்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாளிகாவத்தை மல்லா என்பவர் பயங்கர கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபராவார். கொலை வழக்கொன்றின் விசாரணையில் பிணையில் வெளியில் வந்திருந்த வேளையிலேயே அவர் கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட பின் அவர்கள் இருவரைப் பற்றியும் இதுவரை எதுவித தகவல்களும் தெரியவரவில்லை.

## கடன் வழங்கவுள்ள தகவல் பணியகம்

(கொழும்பு)

இலங்கை கடன் வழங்கும் தகவல் பணியகம் ERT எனப்படும் எஸ்.எம்.எஸ் சேவையை அடுத்த ஏப்ரல் மாதம் அளவில் அறிமுகம் செய்ய திட்டமிட்டுள்ளது.

வர்த்தக வங்கிகளிடம் இருந்து பெறப்பட்ட கடன்களை திருப்பிச் செலுத்த தவறும் சந்தர்ப்பங்களில் கடன் பெறுபவர்களுக்கு அது குறித்து அறிவிப்பது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

அத்துடன் பல்வேறு வங்கிகளிடமிருந்து கடன்பெற்ற ஒருவர் மற்றுமொரு கடனைப் பெறுவதற்கு தகதியுடையவரா என்பதை எஸ்.எம்.எஸ் அமைப்பு உறுதிப்படுத்த உதவும் சுமார் 40 இலட்சம் பேர் வங்கிகளிடம் இருந்து கடன்களைப் பெற்றிருப்பதாக இலங்கை கடன் வழங்கும் தகவல் பணியகம் தெரிவித்துள்ளது.

## மதுபோதையில் விபத்துக்குள்ளாவோருக்கு சிகிச்சை அளிக்க இன்று முதல் பணம் அறவீடு

(கொழும்பு)

மது போதையில் விபத்துக்கு உள்ளாகி அரச வைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோரிடமிருந்து சிகிச்சைக் கட்டணம் அறவிடப்படும் நடைமுறை இன்று முதல் நடைமுறைக்குவரவுள்ளது என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் மது பாவனையை ஒழிக்கும் நோக்குடன் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தி விபத்துக்குள்ளாவோர் மற்றும் இதர மது பாவனையால் விபத்துக்குள்ளாவோருக்கு அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை அளிப்பதற்காக குறைந்த பட்சம் இரண்டாயிரம் ரூபா சிகிச்சைக் கட்டணமாக அறவிடப்படவுள்ளது.

தீங்கை ஏற்படுத்தும் மது பாவனையைத் தடுக்கும் நோக்குடனும் மது பாவனையால் ஏற்படும் விபத்துகள் மற்றும் நோய்களுக்கான சிகிச்சைச் செலவினத்தைக் குறைக்கும் நோக்குடனும் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, மதுபாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையால் 2008 ஆம் ஆண்டு 1522 விபத்துகளும், 2009 ஆம் ஆண்டு 1342 விபத்துகளும், 2010 மே மாதம் வரையான காலப்பகுதியில் 260 விபத்துகளும் நாடுபூராகவும் இடம் பெற்றுள்ளன.

அதுதவிர, மது அருந்திய நிலையில் வாகனங்களைச் செலுத்தி ஏற்பட்ட விபத்துக்களால் 2008 ஆம் ஆண்டு 153 பேர் பலியாகியும், 308 பேர் காயமடைந்தும் உள்ளனர்.

அதேபோல் 2009 ஆம் ஆண்டு 112 பேர் உயிரிழந்தும் 256 பேர் காயமடைந்ததுடன் கடந்த 2010 மே மாதம் வரையான காலப்பகுதியில் 32 பேர் மரணமடைந்தும், 95 பேர் காயமடைந்தும் உள்ளதாக சுகாதார அமைச்சின் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

### பாஸ் நடைமுறையினால் மீனவர்கள் அசௌகரியம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் கடலுக்குச் செல்லும் மீனவர்கள் கடற்படையினரால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள பாஸ் நடை முறையினால் தொடர்ந்தும் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக மீனவர்கள் தெரிவிக்கையில் -

தொழிலுக்குச் செல்வதற்கு கடற்படையினர் பல நிபந்தனைகளை விதித்துள்ளனர்.

கடற்படையினரால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தை நிரப்பி 10 அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன்பின் கடற்படையினர் அடையாள அட்டையினை வழங்குவார்கள். அதன் பின்னர்தான் கடலுக்குச் செல்ல முடியும்.

இந்த அடையாள அட்டையினைப் பெற சுமார் 2 மாதங்கள் செல்லும். கடந்த வருடம் வழங்கப்பட்ட கடற்தொழில் பாஸ் காலாவதியாகிவிட்ட நிலையில், மீண்டும் பாஸ் பெறவேண்டும் என மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

## மலேசியாவிற்கான தொழிலாளர்களை அனுப்புவதில் சிக்கலென முறைப்பாடு



(கொழும்பு)

மலேசியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் பிரதித் தூதுவராகப் பணியாற்றி வரும் மேஜர் ஜெனரல் உதயபெரேராவின் ஒரு தலைப்பட்சமான செயற்பாடுகளினால் இலங்கையில் இருந்து மலேசியாவுக்குத் தொழிலாளர்களை அனுப்புவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகத தெரியவருகிறது. இது குறித்து வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் கூட்டமைப்பு வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்திடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்துள்ளது.

இலங்கையில் இருந்து மலேசியாவுக்குத் தொழிலாளர்களை அனுப்பும் முகவர் நிலையங்களுக்கு எதிராக பிரதி தூதுவர் நேரடியாக புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்து பொலிஸ் அதிகாரிகளை முகவர் நிலையங்களுக்கு அனுப்பி அங்குள்ள முக்கிய ஆவணங்களைக் கைப்பற்றி அவை குறித்து விசாரணை செய்யப்படுவதாகவும் அந்த விசாரணை மந்தகதியில் இடம்பெறுவதாகவும் கூட்டமைப்பு குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு பின்னர் அவரை விடுதலை செய்துவிட்டு அவரது மகனை பொலிஸ் நிலையத்தில் விளக்கமறியலில் வைத்துள்ளனர். இந்த நிலையில் புலனாய்வுப் பிரிவினர் எடுத்துச் சென்ற ஆவணங்களை மீள வழங்காததால் மலேசியாவுக்கு தொழிலாளர்களை அனுப்புவதற்காகக் கிடைத்திருந்த 140 விசா அனுமதிகள் இரத்தாகி இருப்பதாக முகவர் நிலையங்களின் உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## நல்லிணக்க ஆணைக்குழுவின் 2ஆம் கட்டப் பணிகள் ஆரம்பம்



(கொழும்பு)

நேற்றுமுன்தினத்துடன் தனது சாட்சியப் பதிவுகளை நிறுத்திக்கொண்ட உண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழு, தனது இரண்டாம் கட்டப்பணிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இதன்படி இதுவரை காலமும் ஆணைக்குழுமுன் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் இந்த இரண்டாவது கட்டப்பணியில் ஆராயப்பட உள்ளது. சாட்சியப் பகிர்வுகள் பூர்த்தி செய்யப்பட்டாலும் தேவை ஏற்படின் விசேட அமர்வுகள் எதிர்காலத்தில் நடத்தப்படுமெனவும் ஆணைக்குழுவின் ஊடக ஆலோசகர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கடந்த சில மாதங்களில் திரட்டப்பட்ட சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களைப் பரிசீலனை செய்வதே எதிர்காலத்தில் பிரதானமாக மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் மே மாதமளவில் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## புலிகளுக்கு வெடிபொருள் விநியோகம் கைதான சந்தேக நபர் விளக்கமறியலில்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு வெடிபொருட்களை விநியோகித்தவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக இரகசிய பொலிஸார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

இரகசியப் பொலிசாரின் யாழ்ப்பாண அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து கடந்த 18ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டிருந்த ஸ்ரீ ரங்கன் என்பவரே குறித்த சந்தேக நபராவார்.

பழம்வீதி,சங்கானை எனும் முகவரியில் வசிக்கும் பிரஸ்தாப நபர், கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களுக்கான வெடி பொருட்களை விநியோகித்தவர் என்பதை விசாரணைகளின் போது ஒப்புக்கொண்டிருப்பதாக பொலிசார் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளனர்.

அவரை வெளியில் சுதந்திரமாக நடமாட விடுவது தேசிய பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் என்று பொலிஸார் தெரிவித்த வாதத்தை ஏற்றுக் கொண்ட கொழும்பு பிரதான நீதிமன்ற நீதிவான், சந்தேக நபரை விளக்கமறியலில் வைத்து விசாரிக்க இரகசியப் பொலிஸாருக்கு அனுமதியை வழங்கியுள்ளார்.

## புலிகளின் படங்களை வைத்திருந்த இராணுவக் கோப்ரல் கைதானார்

(கொழும்பு)

புலிகளின் சஞ்சிகைகள் மற்றும் புகைப்படங்களை வைத்திருந்த இராணுவக் கோப்ரல் ஒருவரும் அவரது காதலியும் பொலிசரால் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமாமான 119 இலக்கத்துக்குக் கிடைத்த தொலைபேசி அழைப்பொன்றை அடுத்தே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். பஸ் பயணியொருவரே அது குறித்த தகவலை பொலிசாருக்கு வழங்கியுள்ளார். குருநாகலில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது.

இராணுவ கோப்ரலின் காதலி குறித்த புகைப்படங்கள் மற்றும் சஞ்சிகைகளைப் பார்த்துக கொண்டிருந்தது கண்டு குறித்த பஸ் பயணி அது தொடர்பாக உடனடியாக பொலிசாருக்கு அறிவித்துள்ளார். தற்போது அவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாக குருநாகல் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## தோல்வியடைந்தது சென் ஜோன்ஸ் அணி

(யாழ்ப்பாணம்)

யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக் கெதிரான ஒரு நாள் போட்டியில் அநு ராதபுரம் மத்திய கல்லூரி 99 ஓட்டங் களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங் கத்தால் நடாத்தப்பட்ட 13 வயதுப் பிரி வின் 'பிரி குவாட்டர்' போட்டியிலேயே அநுராதபுரம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது.

அநுராதபுரம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 25ஆம் திகதி இப்போட்டி நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அநுராதபுரம் மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய அநு ராதபுரம் மத்திய கல்லூரி அணி, 35.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்து 201 ஓட் டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 202 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி என்ற நிலையில் களமிறங் கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 102 ஓட் டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. (எஸ்)

## கால்பந்தாட்டத் தொடரில் பங்கேற்கும் பாடசாலை அணிகள் பதிவைச்செய்பலாம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத் தால் பாடசாலை அணிகளுக்கிடையில் நடாத்தப்படவுள்ள நடப்பு ஆண்டு கால் பந்துத் தொடருக்குப் பங்குகொள்ள விரும்பும் பாடசாலை அணிகளை வரும் மார்ச் மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின், யாழ். மாவட்டச் செயலாளரால் கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவ தாவது: மேற்படி நடப்பாண்டுக்கான போட் டித் தொடர்கள், 13, 15, 17, 19 வயதுப் பிரி வினருக்கிடையில் நடைபெறவுள்ள தாகவும், 17 வயதுப் பிரிவினருக்கான போட்டித் தொடர் மார்ச் மாதமும், 13,




15 வயதுப் பிரிவினருக்கான போட்டித் தொடர் யூன் மாதமும், 19 வயதுப் பிரி வினருக்கான போட்டித் தொடர் செப் ரெம்பர் மாதமும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 13 வயதுப் பிரிவில் 1999 - 2000ஆம் ஆண்டு பிறந்தவர்களும், 15 வயதுப் பிரிவில் 1997 - 1998 ஆம் ஆண்டு பிறந்தவர்களும், 17 வயதுப் பிரிவில் 1995, 1996ஆம் ஆண்டு பிறந்த வர்களும், 19 வயதுப் பிரிவில் 1993 - 1994 - 1995ஆம் ஆண்டு பிறந்தவர்களும் அங்கம் வகிக்கவேண்டும் என்றும் கேட் டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, இதற்குரிய விண்ணப் பங்களை செயலாளர், பாடசாலை கால் பந்தாட்ட சம்மேளனம், சென் பீற்றர்ஸ் கல்லூரி, கொழும்பு அல்லது யாழ். மாவட்ட கால்பந்தாட்ட இளையோர் செயலாளர், சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆகியோருக்கு வரும் மார்ச் மாதம் ஐந் தாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள் ளது. இதேவேளை, முன்னணிப் பாட சாலைகள் கால்பந்தாட்டப் பயிற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதையும் அவதா னிக்க முடிகின்றது. (எஸ்)

## இசைக்குழு தொடங்கினார் பந்து வீச்சாளர் ஸ்ரீசாந்த்



(கொச்சி)

இந்திய கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த், புதிய அவதாரம் எடுத்துள்ளார். உலகக் கிண்ணப் போட்டித் தொடரில், அணியில் இடம் பெறாத இவர் "எஸ்-36" இசைக் குழுவைத் தொடங்கியுள்ளார்.

இதில் "எஸ்" என்பது ஸ்ரீசாந்த் என் பதையும், 36 என்பது இவரது ராசியான "டி-சர்ட்டையும்" குறிக்கும்.

இந்திய அணியை உற்சாகப்படுத்தும் விதத்தில், இவர் எழுதிய "ஹலோ ஷேர் பங்கே..." எனத்தொடங்கும் இந்திப் பாடலை மேடையில் பாடி அசத்தினார்.

இதுகுறித்து ஸ்ரீசாந்த் கூறுகையில், "இந்தக்குழுவில் இணைந்து பாடல்கள் எழுதுவது, பாடுவது, நடனம் ஆடுவது, பியானோ உள்ளிட்ட இசைக்கருவிகளை வாசிப்பது என அனைத்தையும் கொஞ் சம், கொஞ்சமாக செய்யவுள்ளேன். ஏனெ னில் என்னைவிடச் சிறந்தவர்கள் இதில் உள்ளனர். நான் அவர்களுக்கு ஆதர வாக மட்டும் இருப்பேன்" என்றார்.

## தரவரிசையில் முன்னேற்றம்



(மெல்போர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற தன் மூலம் பெல்ஜியம் வீராங்கனை கிளை ஸ்ரர்ஸ் தரவரிசையில் இரண்டாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அவுஸ் ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டித் தொடர் முடிவடைந்த நிலையில் வெளி யிடப்பட்ட தரவரிசைப்பட்டியலில் பெண் கள் ஒற்றையர் சாம்பியன் பெல்ஜியத் தின் கிம் கிளைஸ்ரர்ஸ் (8515 புள்ளிகள்) மூன்றாவது இடத்திலிருந்து இரண்டா வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். அரை இறுதியில் தோல்வியடைந்தாலும் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி (8655 புள்ளிகள்) தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார். ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா 16ஆவது இடத்தில் இருந்து 13ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். காயம் காரணமாக விளையாடாத அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் நான்காவது இடத்தில் இருந்து 12ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இதேவேளை, அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டியில் கால் இறுதியில் தோற்றாலும் ஸ்பெயின் வீரர் ரபெல் நடால் தொடர்ந்து முதலிடம் வகிக் கிறார். சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர், அவுஸ்ரேலிய ஓப்பன் சாம்பியன் ஜோகோவிச் (செர்பியா), சோடர்லிங் (சுவீடன்), ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) ஆகியோர் முறையே 2 முதல் 5 இடங் களைப் பெற்றுள்ளனர்.

## உலகக்கிண்ணப் போட்டித் தொடரில் பயனுள்ள சொத்தாக இருப்பாராம்!

(சென்னை)

உலகக் கிண்ணப் போட்டித் தொட ரில் இந்திய அணிக்குப் பயனுள்ள சொத் தாக இருக்க முயற்சிப்பேன் என்று தமி ழக வீரர் அஸ்வின் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித் ததாவது:

உலகக் கிண்ணப் போட்டியில் பந்து வீச்சில் மட்டுமின்றித் துடுப்பாட்டத்திலும் சிறப்பாக செயற்பட்டு அணிக்கு உதவிக் கரமாக இருக்க வேண்டும் என்று விரும்பு கிறேன். அணிக்கு எல்லா வகையிலும் பயனுள்ள சொத்தாக இருக்க தீவிர முயற்சி மேற்கொள்வேன். அதற்காக நான் துடுப்பாட்டத்திலும் தீவிர பயிற்சி எடுத்து வருகிறேன். நெருக்கடியைச் சமா ளித்து சிறப்பாக ஆடுவது குறித்தும் நான் என்னைத் தயார்படுத்தி வரு கிறேன்.

இறுதியில் விளையாடும் 11 பேர் அணியில் இடம் பெற வேண்டும் என்பது குறித்து நான் அதிகம் சிந்திக்கவில்லை. எனக்குக் களம் காண வாய்ப்புக் கிடைக் குமா என்று தெரியாது. அதில் எனக்கு இடம் கிடைத்தால் எனது பணியைச்



செம்மையாகச் செய்வேன். இடம் கிடைக்கா விட்டாலும் வருத்தப்படமாட்டேன். நான் என்ன செய்ய வேண்டும் என்பதில் கவ னம் செலுத்துவேன்.

சுழற்பந்து வீச்சில் முன்னிலை வகிக் கும் ஹர்பஜன்சிங் சிறப்பாகப் பந்து வீசி வருகிறார். அவர் எப்போழுதும் உந்து சக்தியாகவும், வழிகாட்டியாகவும் இருக் கக் கூடியவர். டோனி பந்து வீச்சாளர் களுக்கு நல்ல சுதந்திரம் கொடுக்கக் கூடியவர். அது எனக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்புகிறேன்.

தற்போது இங்கிலாந்து அணி நன் றாக செயற்பட்டு வருகிறது. இந்திய துணைக் கண்டத்தில் சூழ்நிலை நன்கு அறிந்துள்ள இலங்கை அபாயகரமான அணியாகும் என்றார்.



அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரில் இளையோருக்கான பெண் ஒற்றையர் பிரிவு போட்டியில் கிண்ணத்தை வென்ற மகிழ்ச் சியை வெளிப்படுத்தும் அன் சோபியா.

## மிஸ்பா உல் ஹக் பொறுப்பான ஆட்டம் 2 விக்கெட்டுகளால் பாகிஸ்தான் வெற்றி

(நேர்பியர்)

மிஸ்பா உல் ஹக்கின் பொறுப் பான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி இரண்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணி களுக்கிடையிலான ஆறு போட்டி களைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி, நேற்று பகலிரவு ஆட்டமாக நியூசிலாந்தின் நேர்பியர் மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப் பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய நியூசிலாந்து அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறை வில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ப்ரெங்கிளின் 62 ஓட்டங்களைப் பெற் றார். மற்றும் நதன் மக்குலம் ஆட்ட மிழக்காது 53 ஓட்டங்களைப் பெற் றார். பந்து வீச்சில் வாஹப் றியாஸ் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றி னார்.

பதிலுக்கு 263 ஓட்டங்களைப் பெற் றால் வெற்றி என்ற நிலையில் களமி றங்கிய பாகிஸ்தான் அணி, மிஸ்பா உல் ஹக்கின் பொறுப்பான ஆட்டத்



தின் மூலம், 49 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் மிஸ்பா உல் ஹக் ஆட்டமிழக்காது 93 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் யூனிஸ்கான், அப்துல் ஷிகாத் தலா 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரைரிஸ் மூன்று, விட்டோரி இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற் றினர். போட்டியின் ஆட்டநாயகனாக மிஸ்பா உல் ஹக் தெரிவானார்.

இவ்வெற்றியின் மூலம் ஆறு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

## ஆறாவது போட்டி இன்று

(சிட்னி)

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணி களுக்கிடையிலான ஆறாவது ஒரு நாள் போட்டி இன்று சிட்னி மைதானத்தில் நடைபெறுகின்றது. இரு அணிகளுக்கு மிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில், ஏற்கனவே, அவுஸ் ரேலிய அணி தொடரை 4-1 என்ற கணக் கில் வென்றுள்ளது. இந்நிலையில் இப்போட்டியில் அவுஸ்ரேலிய அணி பரீட்சார்த்த முயற்சிகளை மேற்கொள் ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


## கரப்பந்தாட்ட பயிற்சி முகாம்

(யாழ்ப்பாணம்)

கரப்பந்தாட்டப் பயிற்றுநர்களுக்கான பயிற்சி முகாம் எதிர்வரும் 16ஆம், 17ஆம் திகதிகளில் இலங்கை கரப் பந்தாட்டச் சம்மேளனத்தின் அங்கீகரிக் கப்பட்ட வளவியலாளர்களினால் யாழ்ப் பாணத்தில் நடாத்தப்படவிருக்கின்றது.

எனவே, மேற்படி பயிற்சி முகாமில் கலந்து கொள்ள விரும்பும் கரப்பந்தாட் டப் பயிற்றுவிப்பாளர்கள், தங்கள் பெய ரினை வரும் 11ஆம் திகதிக்கு முன்ன தாக இல: 186/26, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந் துள்ள யாழ். மாவட்டக் கரப்பந்தாட்டச் சங்கச் செயலாளரின் இல்லத்தில் பதிவு களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

# 20 ஆண்டுகளுக்குப் பின் முதன்முறையாக மியன்மார் நாடாளுமன்றம் கூடியது



(நேபீட்டா)

மியன்மார் வரலாற்றில் 20 ஆண்டுகளுக்குப் பின் நேற்று முன்தினம் முதன் முறையாக நாடாளுமன்ற இரு அவைகளும் கூடின. இந்த முதல் கூட்டத்தில், நாட்டின் புதிய அரசியல் சாசனம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. 50 ஆண்டுகளாக நாட்டில் நிலவி வந்த இராணுவ ஆட்சி முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. அதேநேரம், நாடு முழுவதும் 14 மாகாண, சட்ட சபைகளும் முதன் முறையாகக் கூடின.

மியன்மாரில் 1962 இல் இருந்து இராணுவ ஆட்சி நடந்து வருகிறது. கடந்த ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி பொதுத் தேர்தல் நடந்தது. இதில், ஆங் சான் சூகியின் தேசிய ஜனநாயக லீக் கட்சி கலந்துகொள்ளவில்லை. தேர்தல் முடிவுகளில், இராணுவத் தலைமையால் இயக்கப்படும் ஐக்கிய ஒற்றுமை மற்றும் மேம்பாட்டுக் கட்சி(யு.எஸ்.டி.பி.) பெரும்பான்மை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இதை அடுதது, கடந்த 20 ஆண்டுகளுக்குப் பின் நேற்று முன்தினம் முதன் முதலாக அந்நாட்டு நாடாளுமன்றக் கூட்டம் தொடங்கியது. மொத்தம் 440 இடங்கள் கொண்ட கீழவையும், 224 இடங்கள் கொண்ட மேலவையும் ஒரே நேரத்தில் நேற்று முன்தினம் காலை தொடங்கின. பெரும்பான்மையான இடங்களில் யு.எஸ்.டி.பி. கட்சி உறுப்பினர்கள் அமர்ந்திருந்தனர். ஆங் சான் சூகியின் கட்சி தேர்தலில் பங்கேற்காததால் அதன் உறுப்பினர்கள் யாரும் இடம்பெறவில்லை. கூட்ட நடவடிக்கைகளைப் பார்வையிட பத்திரிகையாளர்கள், அரசியல் நிபுணர்கள், பொது மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

புகைப்படக் கருவி, கைத்தொலைபேசி, கணினிகள், டேப் ரெக்கோட்ர் உள்ளிட்ட பிற எலக்ரோனிக் பொருட்களை நாடாளுமன்றத்துக்குள் கொண்டு வரத் தடை விதிக்கப்பட்டது. இந்த நாடாளுமன்ற முதல் கூடடம், இரண்டு வாரங்களுக்கு நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் 14 மாகாண சட்டசபைகளும் நேற்றுமுன்தினம் முதன் முறையாகக் கூடின. அவற்றிலும் பெரும்பான்மை உறுப்பினர்களாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இடம் பெற்றனர். இதற்கிடையில், சூகி தன் கட்சியின் www.nldburma.org என்ற இணையதளத்தை நேற்று முன்தினம் தொடக்கி வைத்தார். உலக மலர்சசிக்கான மக்கள் ஜனநாயகத்தை அமைப்பதற்கு நம்மிடையே தகவல் தொடர்பு அவசியம். மிக விரைவில் நாம் ஜனநாயகத்தை அடைவோம் என்று நான் நம்புகிறேன் என இந்த இணையதளத்தில் அவர் எழுதியுள்ளார்.




# பதினொரு வருட நடைப்பயணம் இடைநடுவில் முடிவிற்கு வருகிறது

கனடாவின் கியூபெக் பிராந்தியத்தினைச் சேர்ந்த ஜீன் பெலிவு என்பவர் வன்முறைகளையும், மோதல்களையும் எதிரகொள்ளும் சிறுவர்களின் நிலை தொடர்பாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக கால்நடையாக உலகினை வலம் வரும் தனது பயணத்தினை 2000 ஆம் ஆண்டு ஆரம்பித்திருந்தார்.

ஆனால் இதுவரை 27,000 கிலோ மீற்றர்கள் கால்நடையாகப் பயணித்திருக்கும் இந்தக் கனேடியர் எதியோப்பியாவினை அடைந்த போது தனது முயற்சியினை இடைநிறுத்துவது என்ற முடிவினை எடுத்தார். உலகினை வலம் வரும் தனது பயணத்தினை இவர் வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு இன்னமும் 50,000 கிலோ மீற்றர்களைக் கடந்தாக வேண்டும். இதற்கு மேலும் பல ஆண்டுகள் ஆகலாம்.

எங்களது வாழ்வில் நாம் எடுத்துக்கொள்ளும் சில தீர்மானங்களைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் கைவிடும் நிலைக்குத் தள்ளப்படுவது இயலபானதே என தனது முயற்சியினை இடைநடுவில் கைவிட்டு கனடாவிற்குத் திரும்பியிருக்கும் பெலிவு கூறுகிறார்.

2000 ஆம் ஆண்டு ஒகஸ்டில இவர் தனது பயணத்தினை ஆரம்பித்திருந்தார். 55 வயதான இந்த நபர் தனது நடைபயணத்தின் போது ஆறு துணைக்கண்டங்களைக் கடந்து 76,000 கி.மீற்றர்கள் பயணம் செய்திருக்கிறார். அண்மையில் இவர் அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்தினைக் கடந்து பயணம் செய்திருந்தார்.

கடந்த ஞாயிறன்று வன்கூவரில் வந்திறங்கிய இவரை அவரது மனைவி மற்றும் நண்பர்கள் வரவேற்றனர். அடுத்த மாதம் வன்கூவரிலிருந்து நடைப்பயணத்தினை ஆரம்பிக்கும் இவர் ஒக்ரோபர் மாதம் மொன்றியலை வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தனது இந்த முயற்சிக்கு பல்வேறுபட்ட தரப்பினரிடமிருந்தும் நன்கொடைகள் கிடைதததாகவும் விடுதிகள், தேவாலயங்கள், சிறைச்சாலை மற்றும் பிண அறையில்கூட தனது இரவினைக் கழித்ததாகக் கூறும இவர் தனது பயணத்தின்போது பல்வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களுடனும் பழகும் வாய்ப்புத் தனக்குக் கிடைத்ததாகக் கூறுகிறார்.

தனது இந்த நடைப்பயணத்தின்போது 50 சோடி சப்பாத்துகளைப் பயன்படுத்தியிருக்கிறார்.

# குழந்தைகள் பிறந்து 40 வருடமாகிறது முதியவர்கள் வாழும் அதிசயக் கிராமம்



(மார்ரிட்)

ஸ்பெயின் நாட்டில் ஆல் மெடா டி லா கெஸ்டா என்ற கிராமம் உள்ளது. இது தலைநகர் மாட்ரிடில் இருந்து 100 மைல் தொலைவில் உள்ளது. இங்கு 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் மட்டுமே வசிக்கின்றனர்.

கடந்த 1940 ஆம் ஆண்டில் இங்கு 500 குடும்பங்கள் இருந்தன. அப்போது பெரும்பாலானவர்கள் வேலை தேடி இங்கிருந்து வெளியேறினர். அதன் பிறகு திரும்பவில்லை. தற்போது இங்கு 15 குடும்பத்தினரே உள்ளனர். அவர்கள் அனைவரும் 65 வயது முதல் 70 வயதுக்கு மேல்தான் உள்ளனர். இதனால் அங்கு 40 வருடங்களாக புதிதாக குழந்தைகளே பிறக்கவில்லை. இப்போது இங்கு இருப்பவர்களில் 65 வயதுக்காரர்களே வயது குறைந்த இளைஞர்களாக உள்ளனர். இது ஒரு வித்தியாசமான கிராமம் என அங்கு வாழும் 82 வயது முதியவரான ஆர்துரோ ரெகாகோ கூறுகிறார்.

இங்கு 16 ஆம் நூற்றாண்டு கிறிஸ்தவ தேவாலயம் உள்ளது. கிராமத்தின் நுழைவு வாயிலில் அழகிய விளையாட்டு மைதானம் உள்ளது. குழந்தைகள் இல்லாததால் விளையாடுவதற்கு ஆளின்றி வெறிச்சோடிக் கிடக்கிறது என்றார்.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான தாக்குதல் நடத்தப்படமாட்டாது

## எகிப்திய இராணுவம் அறிவிப்பு



(கெய்ரோ)

கிளர்ச்சியாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்படமாட்டாது என்று இராணுவம் அறிவித்ததைத் தொடர்ந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முபாரக் அரசு முன்வந்துள்ளது.

எகப்திய அதிபர் ஹோஸ்னி முபாரக்குக்கு எதிராகக் கடந்த திங்கட்கிழமையன்று அரசியல் இயக்கங்கள் ஒன்றாக அணிதிரண்டன. கடந்த ஒரு வாரமாக கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்காக துப்பாக்கிச் சூடு நடத்தி பீரங்கிகளை வீதிகளில் நிறுத்தி வைத்திருந்த இராணுவமும் இனி கிளர்ச்சியாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப் போவதில்லை என்று அறிவித்திருக்கிறது. இந்த நிலையில், கிளர்ச்சியாளர்களுடன் சுமுகப் பேச்சுவார்த்தை நடத்த முன்வருவதாக அரசுத் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் ஆட்சி ரீதியாக சில மாற்றங்களை மேற்கொள்வதாக புதிதாகப் பொறுப பேற்ற துணை அதிபர் ஒமர் சுலைமான் அறிவித்திருக்கிறார். ஆனால் மேற்கொண்டு வேறு எந்த விதமான சமரச முயற்சிகளிலும் ஈடுபடுவது குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை. இந்நிலையில், இராணுவத்தின் இந்த அறிவிப்பு முட்டாள்தனமானதும் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்வதுமானதாகவும் இருக்கிறது என்று எகிப்தின் பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கெனவே வர்த்தகத் தலங்களில் சூறையாடல்கள், கொள்ளைகள் போன்றவை நடக்கும் நிலையில், இராணுவத்தின் அறிவிப்பு மேலும் பலவீனமாக்கும் என்கிறார்கள்.

இதேவேளை போராட்டம் கட்டுக்கடங்காமல் செல்வதனால் அதிபர் முபாரக்கின் மனைவி லண்டனுக்குத் தப்பிச் சென்றுவிட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

லண்டனில் இவர்களுக்குச் சொந்தமான ஆடம்பர பங்களா உள்ளது. மனைவி லண்டன் சென்றதையடுத்து முபாரக்கும் தப்பிச் செல்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# பாகிஸ்தான் அணு ஆயுதங்களை இருமடங்காகக் குவித்துள்ளதாம்

## அமெரிக்கப் பத்திரிகை தகவல்

(வொஷிங்டன்)

இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் தனது அணு ஆயுதங்களை இரு மடங்காகக் குவித்து வைத்துள்ளது என்றும், கடந்த 4 வருடங்களில் 30-80 வகையான ஆயுதங்களை கொள்முதல் செய்து வைத்துள்ளதாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்காவின் வொஷிங்டன்போஸ்ட் என்னும் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது- அமெரிக்காவின் அரசுசாரா அமைப்பான சர்வதேச பாதுகாப்பு மற்றும் அறிவியல் மையத்தின் தலைவர் டேவிட் அல்பிரட் என்பவர் கூறுகையில், பாகிஸ்தான் தற்போது தனது அணு ஆயுதங்களை இருமடங்கு அதிகரித்து கொள்முதல் செய்து வைதது்ள்ளது. இதில் 110 வகையான யுரேனியம், புளூட்டோனியம் அடிப்படையிலான அணுஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் இருப்புவைத்துள்ளது. 1500 கி.மீ.தூரம் சென்று இலக்கைத் தாக்கும் ஹகாஹீன் -2 எனும் ஏவுகணையினை தயாரித்துச் சோதனை செய்யவுளளது. இவை அனைத்தும் இந்தியாவிற்கு எதிராக ஆயுதப் போட்டியில் இறங்கவும், இதத கைய ஆயுதங்களைக் கொண்டு இந்தியாவைப் போர்முனையில் நிறுத்தவும் தயாராகி வருகிறது. ஏற்கனவே தெற்காசிய பிராந்தியத்தில் பயங்கரவாத அச்சுறுத்தல் அதிகரித்துவிட்டதாக அமெரிக்கா கவலையடைந்து வருகிறது. அதிலும் பாகிஸ்தானின் இந்த ஆயுதக் குவிப்பு பயங்கரவாதிகளின் கைகளில் சிக்கி விடுமோ என்ற பீதியும் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. கடந்த 2008 ஆம் ஆண்டு தெற்காசிய நாடுகளுக்கான அமெரிக்கப் புலனாய்வு அதிகாரி பீட்டர் லவோயி, நேட்டோ இராணுவ அதிகாரிகள் மத்தியில் கூறுகையில், உலகில் மற்ற நாடுகளைவிட பாகிஸ்தான் அணு ஆயுதங்களை வேகமாக உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறது என்றார்.

# இங்கிலாந்து விஞ்ஞானிகளால் செயற்கைப் பெற்றோல் தயாரிப்பு

(லண்டன்)


தற்போது இயற்கையாகக் கிடைக்கும் கச்சாய் எண்ணையில் இருந்து தயாரிக்கப்படும் பெற்றோலுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இந்த நிலையில் இங்கிலாந்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் செயற்கை பெற்றோலைத் தயாரித்துள்ளனர். ஹைட்ரஜனை மையமாக வைத்து புதிய மூலக் கூறுகளுடன் அது தயாரிக்கப்படுகிறது.

இந்தப் பெற்றோல் மூலம் கார்கள் மற்றும் இயந்திரங்களை இயக்க முடியும். இதில் இருந்து வெளியாகும் புகையால் காற்றில் மாசு ஏற்படாது. சுற்றுச்சூழல் பாதிக்கப்படாது. வெளியாகும் வாயு கார்பனைப் போன்று மக்களின் உடல் நலத்துக்கு தீங்கிழைக்காது. செயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட இந்தப் பெற்றோல் ஒரு லீற்றர் 14 ரூபாவுக்கு விற்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பெற்றோல் பங்குகள் மூலம் விற்பனையாக இன்னும் 3 ஆண்டுகளாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்டீபன் பென்னிங்டன் தலைமையிலான விஞ்ஞானிகள் இந்த செயற்கைப் பெற்றோலைக் கண்டு பிடித்துள்ளனர். இது சாதாரண பெற்றோலை விட 3 மடங்கு சக்தி வாய்ந்தது. வாகனங்களில் அடைக்கப்பட்டு அடுத்த ஆண்டு சோதனை நடத்தப்படும். பின்னர் அது பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படும்.

# மதக்கலவரம், வன்முறைகளை ஒடுக்க மத்திய அரசு ஒருபோதும் தயங்காது

## பிரதமர் மன்மோகன்சிங் சூளுரை



(டில்லி)

மதக்கலவரங்களையும், வன்முறைகளையும் ஒடுக்க மத்திய அரசு ஒதுபோதும் தயங்காது என, பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

நேற்று டில்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த புதிய திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு பாதுகாப்புத் தொடர்பாக விவாதிப்பதற்காக, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் அனைத்து மாநில முதலமைச்சர்கள் மாநாடு டில்லியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஏ.கே. அந்தோனி, பிரணாப் முகர்ஜி உட்பட இந்தியாவின் அனைத்து மாநில முதல்வர்களும் கலந்து கொண்டனர்.

மாநாட்டைத் தொடங்கி வைதது்ப் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், எல்லை தாண்டிய பயங்கரவாதம், தீவிரவாதம் என்பன நாட்டின் பாதுகாப்பிற்கு கடும் சவாலாக உள்ளன. எனினும், வடகிழக்கு மாநிலங்களில் தீவிரவாத தாக்குதல் மிகவும் குறைந்துள்ளது. உளவுத்துறை தகவல்கள் பரிமாற்றத்தில் மத்திய மாநில அரசுகளிடையே ஒத்துழைப்பும்., ஒருங்கிணைப்பும் அவசியம்.

பொலிஸ் துறையை நவீனப்படுத்த பொலிஸாருக்கு தீவிரப் பயிற்சி அளிக்கப்படும். பொலிஸ்துறைக்கும் பொது மக்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்த புதிய திட்டம் ஒன்று செயற்படுத்தப்படும்.

அயோத்தி வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டபோது, எந்தவித மத மோதல்களும் ஏற்படவில்லை என்பது நிம்மதி அளிக்கிறது. கடந்த ஆண்டில் மத ரீதியான மோதல்கள் நிகழவில்லை.

இரண்டு தீவிரவாத தாக்குதல் சம்பவம் மட்டுமே நடந்துள்ளது. ஒன்று புனே தாக்குதல். மற்றொன்று வாரனாசி தாக்குதல். மதக்கலவரங்களையும், வன்முறைகளையும் ஒடுக்க அரசு ஒதுபோதும் தயங்காது என்றார்.




# பாதுகாப்பு நிலைமைகளை ஆராய காஷ்மீர் செல்கின்றார் சிதம்பரம்



(புதுடில்லி)

காஷ்மீர் மாநிலத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், அரசியல் நிலவரங்களையும் ஆய்வு செய்யும் வகையில் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இரண்டுநாள் பயணமாக நாளை காஷ்மீர் செல்லவுள்ளார்.

தனது அமைச்சரவையின் கடந்த மாத செயற்பாடுகள் குறித்த அறிக்கையை ப.சிதம்பரம் நிருபர்களுக்கு அளித்தார். அப்போது இந்தத் தகவலை அவர் தெரிவித்தார்.

காஷ்மீர் மாநிலத்தின் அரசியல் நிலவரம் பற்றி ஆய்வு செய்கிறேன். அந்த மாநில பாதுகாப்பு நிலைமை பற்றி ஆய்வு செய்த குழுவினர் மத்திய அரசுக்கு 3 ஆவது அறிக்கை கொடுத்துள்ளனர். அதில் காஷ்மீர் மக்களிடம் நம்பிக்கையை வளர்க்க வேண்டும் என்றும், மத்திய மாநில அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் தெரிவித்துள்ளனர். அதுபற்றியும் ஆய்வு செய்ய இருக்கிறேன் என்று சிதம்பரம் நிருபர்களிடம் கூறினார்.

# தமிழக மீனவர் மீதான தாக்குதல் குறித்து புதுடில்லி மாநாட்டில் கருணாநிதி கண்டனம்

(சென்னை)

இலங்கைக் கடற்படையால் அண்மையில் இரண்டு தமிழக மீனவர்கள் கொல்லப்பட்டமை வன்மையாகக் கண்டிக்கத்தக்கவையாகும் என, மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் முதல்வர் கரணாநிதி கூறினார்.

உள்நாட்டு பாதுகாப்புத் தொடர்பாக விவாதபதற்காக, பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் மாநில முதலமைச்சர்கள் மாநாடு டில்லியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வர் கருணாநிதி, மத்திய அமைச்சர்கள் ப.சிதம்பரம், ஏ.கே.அந்தோனி, பிரணாப் முகர்ஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் பேசிய முதல்வர் கருணாநிதி,

இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது உட்பட தொடர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகும் அவலத்தையும் இந்த அவையின் கவனத்திற் குக் கொண்டு வர விழைகிறேன்.

அண்மையில் கூட, அதாவது 12.01.2011 அன்று, தமிழக மீனவர் ஒருவர் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து 22.01.2011 அன்றும் மேலும் ஒரு மீனவரும் கொல்லப்பட்ட கோரச் சம்பவம் நடந்துள்ளது. இவை வன்மையாகக் கண்டிக்கத்தக்கவையாகும்.

இந்திய மீனவர்கள் மீது இனித் துப்பாக்கிச்சூடு உட்பட எந்தவிதத்திலும் தாக்குதல் நடத்தப்படமாட்டாது என்று புதுடில்லியில், 26.10.2008 அன்று வெளியிடப்பட்ட இந்திய இலங்கை கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி இலங்கை அரசு நடந்து கொள்ள வேண்டும்.



சர்வதேச கடல் எல்லைப் பகுதிகளில் மீனவர்கள் வழி தவறி அண்டை நாட்டின் எல்லைக்குள் நுழைய நேர்ந்தால் மேலை நாடுகளோ அல்லது கழை நாடுகளோ அவர்களைக் கைது செய்வதைத் தவிர உடல் அளவில் அவர்களுக்கு எந்தவிதத்திலும் தீங்கிழைப்பதில்லை. ஆனால் இந்திய மீனவர்கள் சர்வதேச எல்லைக் கோட்டைக் கடந்து இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்றால் இலங்கை கடற்படை இந்திய மீனவர்களைத் தாக்குவதுடன், அவர்களைக் கொல்லும் கொடுமைகளும் அடிககடி நிகழ்கின்றன.

இலங்கை மீனவர்கள் இந்திய கடற்பகுதிக்குள் நுழைந்தால் நமது நாடு அவர்கள் மீது எடுக்கும் நடவடிக்கைகளைப் போல இலங்கை அரசும் எல்லையைக் கடக்கும் இந்திய மீனவர்கள் மேல் சட்டப்படி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இலங்கை அரசை இந்திய மத்திய அரசு கேட்டுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு முதல்வர் கருணாநிதி அனைத்து மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் பேசினார்.

இதேவேளை, இலங்கையில் நடைபெற்ற பேச்சுக்கள் தொடர்பான விபரத்தை இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் டில்லியில் முதல்வர் கருணாநிதியிடம் தெரிவித்தாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் மாணவர்களுக்கு புதுவையில் பாராட்டு விழா

புதுவை தமிழ்ச் சங்கம் சார்பில் இலங்கை தமிழ் மாணவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது.

புதுவை தமிழ்ச் சங்கத்தின் சார்பில் சென்னை தரமணியில் உள்ள தேசிய ஆசிரியர் பயிற்சி பயிலும் இலங்கைத் தமிழ் மாண வர்களுக்கு புதுவை தமிழ்ச் சங்க வளாகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது.

தமிழ் சங்கத்தின் தலைவர் முனைவர் முத்து தலைமை தாங்கி பரிசுகளை வழங்கி பேசுகையில், இதுபோல் பாராடடு விழா நடத்துவது தமிழர்களாகிய நம்முன் ஒற்றுமையை வளர்க்கிறது. தொடர்ந்து 7 ஆண்டுகளாக இதுபோல் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்குப் பாராட்டு விழா நடத்தப்பட்டு வருகிறது. இது வரும் காலங்களிலும் தொடரும் என்றார்.

விழாவில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் யோகேஸ்வரன், யோகேஸ்வரி, தமிழ்ச்செல்வன், தமிழ்ச்செல்வி, திருச்செல்வம், ஹமிதாபேகம், அந்தோனி, கிளாரண்ட் உடபட 23 பேருக்கு பரிசு வழங்கி பாராட்டு அளிக்கப்பட்டது.

அப்போது இலங்கை மாணவர்கள் சார்பில் பேசிய இலஙகைத் தமிழ் மாணவி தமிழ்ச்செல்வி கூறும்போது, இலங்கைத் தமிழ் மாணவர்களாகிய எங்கள் மீது மிகுந்த அன்பு காட்டி எங்களைப் பாராட்டி கௌரவிப்பது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றார்.

விழாவில் முன்னதாக அரங்க நடராசன் தலைமையில் பாட்டரங்கம் நடைபெற்றது. பாவலர்கள் பழனி, பாரதி வசந்தன், மணிமேகலை குப்புசாமி, கவி பூஞ்சோலை ஆகியோர் பொங்கும் தமிழ் என்ற தலைப்பில் கவிதை படித்தனர்.

# ஈழத்தமிழர் என்ற தவறான தகவலால் மகனுக்கு வழங்கப்பட்ட விசா இரத்து

## எதிர்த்து 90 வயது தாய் வழக்கு

ஈழத் தமிழர் என்ற தவறான தகவலால் விசா மறுக்கப்பட்டதால் அமெரிக்காவில் வாழும் மகனைப் பார்க்க முடியாமல், விசாவுக்கு அனுமதி கேட்டு சென்னை உயர்நீதிமன்றில் மூதாட்டி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

சென்னை உயர் நீதிமன்றில் நாகை மாவட்டம், போரவச்சேரியைச் சேர்ந்த பாப்பாம்மாள் (வயது 90) தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது -

எனது மகன் முத்துவேல் செல்லையா இயற்பியல் பட்டம முடித்துவிட்டு புனே வானிலை ஆய்வு மையத்தில் பணியாற்றினார். பின்னர் அமெரிக்காவில் உள்ள மெரிலேண்ட் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்பு முடித்துவிட்டு, வொஷிங்டனில் உள்ள வானிலை முன்னறிவிப்பு மையத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றுகிறார். அங்கு ஒரு தமிழ்ப் பெண்ணைத் திருமணம் செய்து 2 குழந்தைகளுடன் வசித்து வருகிறார். அவருக்கு அந்த நாட்டின் சேவை விருது கள் கிடைத்துள்ளன. 1992 ஆம் ஆண்டு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

இந்த நிலையில் 1997 ஆம் ஆண்டு 'முல்லை இதழ்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் இந்தியாவுக்கு வந்து பொது நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டார். பெங்களூரில் நடந்த அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கலந்து கொண்டார்.

இலங்கைத் தமிழர்களுக்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டும் என்று அந்த கூட்டத்தில் முத்துவேல் பேசினார். இதைக் குறிப்பிட்டு பத்திரிகை ஒன்றில் கட்டுரை எழுதிய ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி, எனது மகனை ஈழத் தமிழர் என்று குறிப்பிட்டுப் பல குற்றச்சாட்டுகளைத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் 2002 ஆம் ஆண்டில் முடிந்த இந்தியாவுக்கான விசாவை, 2012 ம் ஆண்டு வரை நீடித்துள்ளார். ஆனால் இந்த விசாவைத் திடீரென்று வாஷிங்டனில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் ரத்துச் செய்து விட்டனர். இதனால் அவர் இந்தியாவுக்கு வந்து என்னைப் பார்ப்பதற்கு தடையேற்பட்டுள்ளது

அவர் வெளிநாட்டில் வாழும் இந்தியர். ஈழத் தமிழர் என்று கூறப்பட்ட தவறான தகவலால் விசா மறுக்கப்படுகிறது. எனக்கு 90 வயதாகிறது. கண்கள் சரிவரத் தெரியவில்லை. காது கேட்கவுமில்லை. போனில் கூட முத்துவேலுடன் பேச முடியவில்லை.

அவரைப் பார்த்து 13 ஆண்டுகள் ஆகிறது. எனவே இந்தக் கடைசி காலத்திலாவது என்னை முத்துவேல் வந்து பார்ப்பதற்கு வசதியாக விசா அனுமதி வழஙக தூதரக அதிகாரிகளுக்கு ஆணையிடும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை நீதிபதி பி.ஜோதிமணி விசாரித்தார். இந்த மனுவுக்கு இன்னும் ஒரு வாரத்தில் பதிலளிக்கும்படி மத்திய உள்துறை அமைச்சக செயலாளர், குடி பெயர்ப்பு அதிகாரி ஆகியோருக்கு உத்தரவு பிறப்பித்து நீதிபதி உத்தரவிட்டார்

# வடக்கில் பாடசாலைகளுக்குவேண்டிய வசதிகளை மேம்படுத்த நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு,வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளுக்குத் தேவையான கட்டடங்கள் விஞ்ஞான ஆய்வுகூடங்கள் மற்றும் கணனி அறைகள் என்பன இந்த வருடம் நிர்மாணித்துக் கொடுக்கப்பட உள்ளதாக ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தெரிவித்தார்.

இந்தவருடத்தில் வடமாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் ஆளுநர் தலைமையில் திருகோணமலையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடமாகாணத்தில் இவ் வருடத்திற்கான கல்வி அபிவிருத்திக்கென அரசாங்கம் 31 கோடியை ஒதுக்கியுள்ளது. இதன் மூலம் வடமாகாணத்தின் கல்விசார் நடவடிக்கைகள் துரிதமாகப் புனரமைக்கப்படவுள்ளது.

கடந்தவருடம் கல்வி மேம்பாட்டுத்திட்டத்தில் 46 பாடசாலைகளில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசாலைகளில் இந்த மாதம் தொடக்கம் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த வருடத்திற்காக வடமாகாணசபை ஊடாக 200 மில்லியன், உலகவங்கி மூலம் 80 மில்லியன், றவோதய திட்டத்தின் கீழ் 30 மில்லியன் ரூபாக்களென மொத்தம் 310 மில்லியன் ரூபா கல்வி சார் நடவடிக்கைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒதுக்கப்பட்ட நிதி மூலம்,பாடசாலைகளுக்குத் தேவையான தளபாடங்கள் உபகரணங்கள் மற்றும் கணனி, ஆய்வுகூட உபகரணங்கள் மற்றும் இதர வசதிகளும் செய்து கொடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் ஆளுநரின் செயலாளர் ரங்கராஜா,



பிரதம செயலாளர் ஏ.சிவசுவாமி,கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன், மாகாண கல்விப்பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் உட்படப்பலர் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் நெல் அறுவடை பாதிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீண்டும் இடைஇடையே பெய்துவரும் கனமழையினால் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வருடம் 57 ஆயிரம் ஏக்கரில் நெல் செய்கை பண்ணப்பட்ட போதிலும் சீரற்ற காலநிலையால் நெல்லை அறு படைசெய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தின் தேவையை விட அதிகளவில் நெல் உற்பத்தியை எதிர்பார்க்கப் பட்ட போதிலும் தற்போதைய அசாதாரண காலநிலையினால் நெல் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை சீரற்ற காலநிலையினால் கிளிநொச்சியில் மரக்கறிகளின் விலையும் அதிகரித்துக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (28)

# இடம்பெயர்ந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் கிடைத்தன

(யாழ்ப்பாணம்)

வன்னி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து தனிப்பட்ட பரீட்சார்த்தியாக க.பொ.த(சா/த) 2009 பழைய பாடத்திட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரியில் பரீட்சைக்குத் தோற்றிய 21 பரீட்சார்த்திகளும் தங்களது பெறுபேற்றினை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் பெறுபேற்றைப் பெற்றுக்கொள்ள வரும்போது தவறாது மாணவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையையும் கொண்டு வருமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

21 பரீட்சார்த்திகளின் பெயர் விபரம் வருமாறு: சிவபாலன் பார்த்தீபன்,சிவசிதம்பரம் சாமிலன்,விஜிதா சிவாபாலன். தர்சிகா தெய்வேந்திரன், நிரோசா திரவியம், ஜெகதீஸ்வரன் கீர்த்தனா,ஜெகதீஸ்வரன் கீர்த்தனன்,தம்பிராசா ரஞ்சினி, செல்வநாதன் மேனகன். நவரத்தினம் சதீஸ்,ஞானப்பிரகாசம் அன்ரனி வினோத், கந்தசாமி உஷாந்தி, ஸ்ரீரஞ்சினி அமரசிங்கம்,பார்த்தீபா அழகேந்திரம்,அன்ரனி சாகர் சுயந்தன்.கலிஸ்து விமல் நிக்சன்,கிரிஜா நடராஜா, அம்ரோசி மரின் சுகந்தினி. கஸ்பர் மரியநாயகி, சிவராஜலிங்கம் கோகுலன், அமல்ராஜ் றெனீசியா.

# மழைபெய்யக் கூடாதென வேண்டி வழிபாட்டில் ஈடுபடும் விவசாயிகள்

(கைதடி)

குடாநாட்டில் திடீர் காலநிலை வேறுபாட்டினால் மழை பெய்யக்கூடாது என வேண்டி விவசாயிகள் சிலர் ஆலய வழிபாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது பெரும்போக நெற்செய்கையின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது. அதே நேரத்தில் வெங்காயச் செய்கையிலும் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நேரத்தில் மழை பெய்தால் நெல் அறுவடை மற்றும் வெங்காயச் செய்கை போன்றவை பாதிக்கப்படக்கூடும். இதனால் மழை பெய்யக்கூடாது என விவசாயிகள் ஆலய வழிபாடுகள் மற்றும் விசேடபூசை வழிபாடுகளை நடத்தி வருகின்றனர். (25)

# கழிவுநீர் வழிந்தோடமுடியாத பாசையூர் வாய்க்கால்கள்

(பாசையூர்)

பாசையூர் பகுதியில் உள்ள அநேகமான வடிகால்கள் துப்புரவு செய்யப்படாத நிலையில் கழிவு நீர் வழிந்தோடுவது தடைப்பட்டுக் காணப்படுகின்றது.

இக்கால்வாய்களில் சொப்பிங் பைகளும், சம்போ வெற்றுப் பைகளும் மற்றும் கழிவுப் பொருட்களும் காணப்படுவதே இந்தக் கழிவு நீர் தேங்குவதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கால்வாய்களில் தேங்கும் கழிவு நீரினால் நுளம்புப் பெருக்கமும் இப்பகுதியில் அதிகரித்துக் காணப்படுவதால் தொற்றுநோய்கள் பரவும் அபாயம் காணப்படுகிறது. (25)

# ஐ.எவ்.ஆர்.சி அமைத்த வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சம்மேளனத்தின் (ஐ.எவ்.ஆர்.சி) யின் நிதியுதவியில் கிளிநொச்சி மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 100 நிரந்த வீடுகள் பயனாளிகளிடம் கடந்த 28 ஆம் திகதி கையளிக்கப்பட்டது.

கடந்த யுத்த காலத்தின்போது இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தற்சமயம் மீள்குடியமர்ந்துள்ள ஒருதொகுதி குடும்பங்களுக்கே இவ்வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இலங்கை வந்திருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரால் இவ்வீடுகள் சம்பிரதாயபூர்வமாக நடைபெற்ற நிகழ்வின்போது பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டன.

இதில் கிளிநொச்சி அரச அதிபர், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள், பொதுமக்கள் முதலானோர் கலந்துகொண்டனர். (பா)

# குறைந்த கட்டணத்துடன் இணையசேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையினரினால் குறைந்த கட்டணத்தில் மக்களுக்கும் மாணவர்களுக்கும் இலத்திரனியல் சேவையை வழங்கும் முகமாக நெட்மோ நெறகூ என்னும் சேவை மையம் ஒன்று யாழ். பிறவுண் வீதியில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகாமையில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா அவர்களால் இம்மையம் திறந்துவைக்கப்பட்டது.

எனவே இந்தக் குறைந்த கட்டணத்திலான சேவையை மாணவர்களும் மக்களும் பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டுமென செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையினர் தெரிவித்தனர். (பா)

# இலங்கை வரைபடம் நவீன மயமாகிறது

(கொழும்பு)

இலங்கையின் வரைபடம் நவீனமயப்படுத்தப்பட இருக்கின்றது. இத்திட்டத்தின் கீழ் இலங்கை சம்பந்தமான சகல புவியியல் அம்சங்களும் புதிய வரைபடத்தில் இடம்பெற விருக்கின்றன.

நில அளவைத் திணைக்கள அதிபர் எஸ்.எம்.டபிள்யூ. பெர்னாண்டோ இது தொடர்பாகத் தெரிவிக்கையில்:

அபிவிருத்தித் திட்டங்களும் இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்டமாற்றங்களும் புதிய வரைபடத்தில் தெளிவாகக் காண்பிக்கப்படும். அம்பாந்தோட்டைத் துறைமுகம், சூரிய விளையாட்டு மைதானம் என்பனவும் புதிய வரைபடத்தில் உள்ளடங்கியுள்ளன.

# நாட்டின் அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தியை மேற்கொள்ளத் திட்டம்



(கொழும்பு)

நாட்டின் சகல துறைகளிலும் இந்தவருடம் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு திட்டமிட்டுள்ளதாக அமைச்சின் பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளில் 15.9 மில்லியன் ரூபாவும் பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகளில் 31.9 மில்லியன் ரூபாவும் செலவிடப்படும்.

தேசிய பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளில் 21.4 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை சகல மாகாணங்களிலும் சமநிலையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறுவதை நிச்சயிக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 1.12 மில்லியன் ரூபாவை அமைச்சு ஒதுக்கியுள்ளது.

சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதன் மூலம் அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பது அரசாங்கத்தின் நோக்கமாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் வசந்தத்தில் வங்கிக்கடன் திட்டம்

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் வங்கியின் யாழ்.மாவட்ட கிளைகள் வடக்கின் வசந்தம் செயற்திட்டத்திற்கு அமைவாக மக்களுக்குக் கடன் வசதிகளை பெற்றுக் கொடுக்கவுள்ளதாக வங்கியின் பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

இதன்பிரகாரம் வீடுகட்டுவதற்கும் வீடு திருத்துவதற்குமான கடன்வசதி, வாழ்வாதார மேம்பாட்டுக்கடன்,சுயதொழில் முயற்சிக்கடன், கால்நடை அபிவிருத்திக் கடன் என்பவற்றை வழங்கிவருகின்றது.

இதில் ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் தலா 2 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுவருவதாக அவர் தெரிவித்தார்.

# இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் அனுமதி பெற்று விலக வாய்ப்பு



(கொழும்பு)

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்கள் பெப்ரவரி 4 முதல் 12ஆம் திகதி வரை அனுமதி பெற்று இராணுவத்திலிருந்து விலகுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என இராணுவம் அறிவித்துள்ளது.

இராணுவ சேவையிலிருக்கும்போது விடுமுறை பெறாமல் கடமைக்குச் சமுகமளிக்கத் தவறிய அதிகாரிகளும், சிப்பாய்களும் உத்தியோகபூர்வமாக அனுமதி பெற்று விலகுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், சுதந்திரத் தினத்தையொட்டி இந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உபய மெதவல தெரிவித்தார்.

கடமைக்குச் சமுகமளிக்கத் தவறியவர்கள் மேற்படி காலப் பகுதியில் சம்பந்தப்பட்ட படைப் பிரிவுத் தலைமையகங்களுக்குச் சென்று, அங்கு அமைக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ கருமபீடத்தில் இராணுவத்திலிருந்து விலகுவதற்கான உத்தியோகபூர்வ அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் கூறினார்.

இதைப் பொதுமன்னிப்பாக கருத முடியாது எனவும் ஆனால் விசேட சலுகையொன்றாகும் எனவும் அவர் கூறினார். கடமைக்குச் சமுகமளிக்காமல் தப்பியோடியவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை தொடரும் எனவும் அவர் தெரிவித்தார்.

# யாழ்.மக்களிடம் அச்ச உணர்வு....

கடந்த நவம்பர் மாதம் முதல் யாழ்.குடாநாட்டில் நடைபெற்று வருகின்ற கடத்தல், கொலை, கொள்ளைகள் காரணமாக தோன்றிய அமைதிச் சூழ்நிலையில் மக்கள் மிகுந்த அச்ச உணர்வுடன் உள்ளதாக பிரிட்டிஷ் மற்றும் சுவிஸ் நாடுகளின் தூதரக அதிகாரிகளைக் கொண்ட தூதுக் குழு ஒன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தது. சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான ஆணைக்குழுவினருக்கும் மேற்படி தூதுக்குழுவினருக்குமிடையில் சந்திப்பு ஒன்று யாழ். ஆயர் இல்லத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் போதே யாழ். ஆயர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலிகாமம் வடமராட்சி கிழக்கு, எழுதுமட்டுவாள் பகுதிகளில் மக்களின் மீள்குடியமர்வு தாமதமடைந்திருப்பது குறித்தும் நேற்று யாழ்.வந்த பிரிட்டிஷ் மற்றும் சுவிஸ் தூதரக அதிகாரிகளைக் கொண்ட குழுவினரிடம் யாழ். மறைமாவட்ட ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ...வாக எடுத்துக் கூறினார்.

பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த பிரதிச் செயலாளர் டொமினிக் வில்லியம்ஸ், அபிவிருத்தி ஆலோசகர் டேவிட் அஸ்லி அரபியல் அதிகாரி செல்வி அஸ்மா எட்றிஸ் மற்றும் சுவீஸ் தூதரகத்தைச் சேர்ந்த சஸ்ஸா முல்லர் ஆகிய பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்று முற்பகல் 11.15 மணியளவில் யாழ்.ஆயர் இல்லத்தில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதில் சமாதானத்திற்கும் நல்லெண்ணத் துக்குமான குழுவின் சார்பில் யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, செயலாளர் எஸ்.பரமநாதன், பொருளாளர் என்.ஜீவரட்ணம், அருட்தந்தை எஸ்.பி.நேசகுமார், யாழ்.வணிகர் கழகத் தலைவர் ஆர்.ஜெயசேகரம், கைத்தொழில் சங்கத் தலைவர் பூரணச்சந்திரன், வைத்தியர் எஸ். தியாகராஜா, முன்னாள் குரு முதல்வர் அருட்தந்தை எஸ்.ஏ. செல்வராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் யாழ். மறைமாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசியல் யாப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சரத்துக்கள் அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் மாகாண சபைகளுக்கு பூரணமான ஆக்கபூர்வமான அதிகாரங்கள் கிடைக்க வேண்டும் எனவும், இதற்கு உங்களால் ஆன ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இலங்கையில் கொழும்பில் தான் ஆட்சி அதிகாரமுள்ளது. இந்த ஆட்சியில் எங்களது பங்களிப்பு என்ன என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுப் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த கேரதீவு சங்குப் பிட்டிப் பாலம் உட்பட யாழ்.குடாநாட்டில் ஆறு பாலங்கள் பிரிட்டன் நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்டமைக்கு பிரிட்டன் அரசிற்கு நன்றி தெரிவித்ததுடன், யாழ்ப்பாணத்தில் பிரிட்டிஷ் கவுன்சில் ஒன்றினை ஸ்தாபிக் கும்படியும் கோரிக்கை விடுத்தார். அத்துடன், பிரிட்டன் நாட்டின் தனியார் பல்கலைக்கழகங்களை இலங்கையில் அமைத்து ஆங்கில மொழியறிவை விருத்தி செய்வதற்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சுவிஸ் அரசாங்கத்தின் நிதியுதவியின் கீழ் தென்மராட்சி மறவன்புலவு கிராமத்தில் தலா ஆறு இலட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்ட 350 வீடுகள் மற்றும் நல்லூரில் அமைக்கப்பட்ட நவீன வசதியுடனான பாடசாலை என்பனவற்றை அமைத்துத் தந்து அப்பகுதி மக்களின் வாழ்வாதார உதவிகளை வழங்கியதற்கும் சுவிஸ் அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

பிரித்தானிய அரசு 1948 ஆம் ஆண்டு நாட்டை பெரும்பான்மையினரிடம் கொடுத்து விட்டுச் சென்றது. இதுவே இவ்வளவு பிரச்சினைகளுக்கும் காரணமாக அமைந்தது.

எனவே நாட்டில் உள்ள சிறுபான்மை இனத்தினருக்கு தீர்வை பெற்றுத் தர வேண்டிய தார்மீக பொறுப்பு பிரித்தானியர்களுக்கு உள்ளது.

தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற பேரவலங்களுக்கு பிரித்தானியர்கள் இழைத்த அத்தவறுதான் காரணம். எனவே அதைச் சரிசெய்ய வேண்டிய கடமையும் பொறுப்பும் பிரித்தானியர்களுக்கு இருக்கின்றது . இதை உணர்ந்து எமது மக்கக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும்.

இலங்கை அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும். பொருளாதார தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கான வழிகளைக் கண்டு பிடித்துத் தர வேண்டும். இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றித் தர வேண்டும்.

பிரித்தானியப் பல்கலைக் கழகம் பிரிட்டிஷ் தூதரக கிளை ஆகியவற்றை யாழ். மண்ணில் திறக்கவேண்டும் .

மத்தியில் நடக்கின்ற ஆட்சியில் தமிழர்கள் பங்கு வகிக்கும் வகையில் செயல் திட்டங்களை பிரித்தானிய அரசு செய்து தர வேண்டும் என்று மேலும் கோரிக்கைகளை முன் வைத்தனர்.

இதற்குப் பதிலளித்த பிரிட்டன் மற்றும் சுவிஸ் தூதரக அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில், யாழ்.குடாநாட்டில் ஆங்கிலக் கல்வியை விருத்தி செய்யவும் பிரிட்டிஷ் கவுன்சில் ஒன்றை நிறுவுவது தொடர்பாகவும் தாம் பரிசீலிப்பதாகவும், பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களை முன்னெடுக்க முடியுமா என்பது குறித்தும் பரிசீலிப்பதாகத் தெரிவித்தனர். மேலும் அரசியல் தீர்வு விடயத்தில் சாதகமான நடவடிக்கைகளை மட்டுமே எம்மால் எடுக்க முடியும் எனவும் தெரிவித்தனர். (பா, 52)

# வேட்பு மனுக்கள்.....

ஐ.தே.க. கட்சியின் நகரசபை தேர்தலுக்கான முகவராக அபேயநாயக்க பியதாஸ என்பவரை நியமித்தோம். அவர் நான்கு இளைஞர் வேட்பாளர் உட்பட 11 வேட்பாளர்களின் பெயர்களைக் கொண்ட நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தார்.

இந்த நியமனப் பத்திரங்களுடன் சேர்த்து கொடுக்கப்பட்ட சத்தியக் கடதாசியில் ஒரு இளைஞர் வேட்பாளரின் பெயர் சரியாக எழுதப்படாததால், அவரது நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட மாட்டாது எனத் தெரிவத்தாட்சி அலுவலர், அபேயநாயக்க பியதாஸவிடம் வாயால் கூறினார் என திஸ்ஸ அத்தநாயக்க மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இது ஏற்கப்படாமல் விட்டதற்கான காரணமான உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்டப்பிரிவையும் தெரிவத்தாட்சி அலுவலர் கூறினார். நியமனப் பத்திரங்களை ஏற்க மறுத்தமை சட்டத்துக்கு மாறானது என மனுதாரர் அத்தநாயக்க கூறியுள்ளார்.

எனவே, இது தொடர்பில் ஆணைகோரும் மனுவை தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கு எதிராக தாக்கல் செய்ய சட்டத்தில் இடமுண்டு எனவும், திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

# சுனாமி நூதனசாலை அமைக்கத் திட்டம்

(கொழும்பு)



கடந்த 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தம் காரணமாக உயிர் நீத்தவர் களை நினைவு கூரும் முகமாக சுனாமி நூதனசாலை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக கலாச்சார அமைச்சர் ரி.பி.ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஹிக்கடுவ பெரலிய புகையிரத பாதைக்கும் புத்தர் சிலை ஒன்றுக்கும் அண்மையாக மூன்று ஏக்கர் காணியில் நூதனசாலை அமையவுள்ளதாக அவர் கூறினார்.

2004ஆம் சுனாமியின் போது பெரலியவிலுள்ள புகையிரத பாதை கடுமையாக சேதமாக்கப்பட்டு பெரும் அனர்த்தத்துக்கு காரணமாயிற்று. இலங்கை மக்களுக்கு சுனாமி முதல் அனுபவமாக இருந்தது.

அத்துடன், இது மாறாத வடுக்களையும் விட்டு சென்றது. இதுவே நூதனசாலை அமைப்பதன் காரணம் என ரி.பி.ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.

# கே.பி.தலைமையில்.....

அவுஸ்திரேலியா மற்றும் கனடா ஆகிய நாடுகளைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலரும் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விஜயத்தின் போது, யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கையின் படைத்துறை உயர் அதிகாரிகளையும் சந்தித்த கே.பி, யாழ் குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்ததுடன், யாழ் மக்களுக்குத் தேவையான அவசியமான விடயங்களை நிறைவேற்றி வைப்பதாக அவர் உறுதிமொழி வழங்கியதாகவும் கூறப்படுகின்றது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய போது, உணர்ச்சிவசப்பட்டவராகக் காணப்பட்ட கே.பி. ஒரு கட்டத்தில் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் அழுததாகவும் இந் நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். அத்துடன், யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலரையும் கடந்தவாரம் கே.பி சந்தித்து கலந்துரையாடியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில், அமெரிக்காவிலிருந்து கொழும்பு சென்றுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையிலேயே புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகளை கே.பி மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, வடக்கின் அரசியல் மற்றும் களநிலைமைகள் குறித்து இலங்கையின் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு கே.பி நேற்று முன்தினம் விளக்கம் அளித்துள்ளார். இச் சந்திப்பு இலங்கையின் படைத்துறை அமைச்சின் செயலகத்தில் நடைபெற்றதாக படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ் மக்களின் இன்றைய நிலைமைகளை மேம்படுத்துவது தொடர்பில் பல கோரிக்கைகள் இச் சந்திப்பின் போது கே.பி. குழுவினரால் முன்வைக்கப்பட்டதாகவும், இக் கோரிக்கைகளில் மூன்று கோரிக்கைகளை நடைமுறைப்படுத்த கோத்தபாய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தீ வைத்தாலும்....

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. "தீ வைத்தாலும் எழுதுவோம், கையை வெட்டினாலும் எழுதுவோம்" போன்ற கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டக் காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உபதலைவரான அ.நிக்ஸன் -

ஒவ்வொரு வருடத்திலும் ஜனவரி மாதத்திலேயே ஊட கங்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இடம்பெற்று வருகின்றன.

லங்கா ஈ நியூஸ் இணை யத்தள ஊடகவியலாளர் எக்னலிகொட காணாமல் போய் ஒரு வருடமாகியுள்ளது. இந்நிலையில், நேற்று முன்தினம் லங்கா ஈ நியூஸ் இணையத்தள அலுவலகத்தின் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் தீக்கிரையாக் கப்பட்டமையானது, அரசாங்கத்திற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நடவடிக்கையென்று ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.


அவ்வாறானால் அரசாங்கம் குற்றவாளிகளை கண்டுபிடித்து அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தினால் இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ளவர்களை கண்டுபிடிக்க முடியும்.

இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

இதுவரை இடம்பெற்ற ஊடகங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் குற்றவாளி ஒருவரேனும் கைதுசெய்யப்படவில்லை. இந்நிலையில், ஊடகங்கள் மீது தாக்குதல் நடத்திய ஒரு குற்றவாளியையாவது கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தினால் ஊடக சுதந்திரத்திற்குப் பாதுகாப்பாக அமையும்.


குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் மாத்திரமன்றி சகல அரசியற் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர, ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர் சரத் பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா, ஜனநாயக தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் அலஸ், மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன, ஐக்கிய சோசலிசக் கட்சித் தலைவர் ஸ்ரீதுங்க ஜயசூரிய மற்றும் ஊடக வியலாளர்களெனப் பலர் கலந்து கொண்டனர்.



# கருத்துச் சுதந்திரத்தை அச்சுறுத்துவது ஜனநாயகத்தை பலவீனப்படுத்துவதாகும்

## ஊடகம் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா கவலை



லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தாக்கப்பட்டமைக்கு அமெரிக்கா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விரைவானதும் முறையானதுமான விசாரணை நடத்தப்பட வேண்டுமெனவும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: கொழும்பிலுள்ள லங்கா ஈ நியூஸ் அலுவலகம் மீதான அண்மைய தாக்குதல் குறித்து நாம் ஆழ்ந்த கவலையடைகிறோம்.

இச்சம்பவத்திற்கு யார் பொறுப்பாகவிருந்தாலும் ஊடக நிறுவனங்களுக்கு எதிரான இத்தகைய வன்முறைகள், கருத்து சுதந்திரத்தை மேலும் அச்சுறுத்துவதுடன், நாட்டில் ஜனநாயகத்தையும் பலவீனப்படுத்துகிறது. இச்சம்பவம் குறித்து விசாரணையை ஜனாதிபதி ராஜபக்ஷ அறிவித்துள்ளதை நாம் புரிந்துகொண்டுள்ளோம். இவ்விசாரணை விரைவாகவும் முறையாகவும் நடைபெறுவதுடன் குற்றம் புரிந்த அனைவரையும் நீதியின்முன் நிறுத்த வேண்டும் எனவும் நாம் வலியுறுத்துகிறோம்.

## 'லங்கா'வுக்கு தீவைத்த 'அனுமார்களில்' ஒருவர் கைது

(கொழும்பு)

ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் அதிரடி நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

இதன் முதல் நடவடிக்கையாக லங்கா ஈ நியூஸ் அலுவலகம் மீதான தாக்குதல் தொடர்பாக, சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றொருவரைத் தேடி வருவதாகவும் நுகேகொடை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எஸ்.பி. தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

ஒப்பந்தங்களின் பேரில் குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுவொன்றின் அங்கத்தவரான வெல்லம்பிட்டியவைச் சேர்ந்த நபர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தேடப்படும் மற்றொரு சந்தேக நபரும் அதே பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவரின் சகா கைது செய்யப்பட்டவுடன் அவர் தப்பியோடியுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.எஸ்.பி. தேசபந்து தென்னகோன் மேலும் கூறினார்.

## இலங்கையர் சடலம் இத்தாலியில் மீட்பு

இலங்கையர் ஒருவர் இத்தாலியின் தலைநகர் ரோமில் உள்ள வீதி ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டு உள்ளார். சுமார் 48 வயது மதிக்கக் கூடியதாக உள்ள இவர், படுகொலை செய்யப் பட்டு இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. எனினும் ஆதாரங் கள் எவையும் இல்லை.

இயற்கையான மரணம் என்றே அந்த நாட்டின் பொலிஸார் நம்புகின்றனர். இருப்பினும் பிரேத பரிசோதனை இடம்பெறுகின்றது என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பால்மாவிலை அதிகரிப்பு

400 கிராம் பால்மாவின் விலையை 33 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலையை 82.50 ரூபாவினாலும் அனுமதிக்குமாறு கோரி அரசுடன் பேசி வருவதாக அங்கர் பால்மாவை விநியோகிக்கும் பொன்டெரா நிறுவனத்தின் வர்த்தக குறியீட்டு முகாமையாளர் றொஸான் குலசூரிய தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் நாம் வர்த்தக அமைச்சரைச் சந்திக்கவுள்ளோம். அதனையடுத்து முடிவுகள் தெரிந்துவிடும் என அவர் கூறினார்.

நாம் கேட்டுள்ள விலை அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இறக்குமதித் தீர்வை நீக்கப்பட்டதால் கிடைத்த நிவாரணம் மிக சொற்பமானது என அமைச்சருக்கு தெரிவித்துள்ளதாகவும் றொஸான் குலசூரிய குறிப்பிட்டார்.

விலை அதிகரிப்பை அனுமதிக்காவிட்டால் பால்மா கம்பனிகள் வியாபாரத்தைக் கைவிட வேண்டி வரும் என அவர் தெரிவித்தார்.

16 ரூபா இறக்குமதி வரி நீக்கம் பெரிய தாக்கம் எதனையும் விளைவிக்கப்போவதில்லை. தேசத்தை கட்டியெழுப்பும் மற்றும் வியாபார புரள்வு வரி ஆகிய வரிகள் தொடர்கின்றன என அவர் குறிப்பிட்டார்.

அநேகமான வெளிநாட்டு பால்மா கம்பனிகள் விலை அதிகரிப்புக்கான அனுமதியை கோருகின்றன. நாம் எமது நடவடிக்கை பற்றி யோசித்து வருகின்றோம். இது தொடர்பில் விரைவில் அறிவிப்போம் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## உணவில் விசம் கலவை; அதனை உண்ட குழந்தை பலி

கொட்டகதெனியாவ பிரதேசத்தில் உண்ணும் உணவிலே உறவினர் ஒருவர் விசம் கலந்ததில் மூன்று வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளதுடன், குழந்தையின் தாயாரும், சகோதரியும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொட்டகதெனியாவ பிரதேசத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் குற்றவாளியென கருதப்படும் நபர் தலைமறைவாகி உள்ளதாகவும், இவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குடும்பத் தகராறின் காரணமாக தாயாரின் மச்சானே இவ்வாறு செய்திருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கொட்டகதெனியாவ பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அரசுடன் பேச்சு...

சிறிபால டி சில்வா மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராஜா, சுரேஸ் பிரேமசந்திரன் மற்றும் எம். சுமந்திரன் ஆகியோர் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### புலிகளை வெற்றி.....

கருதிய போதிலும், அந்தக் எண்ணக்கரு பிழையானது என அரசாங்கம் நிரூபித்ததாக அவர் தெரிவித்துள்ளார். எனினும், அதற்காக அதிகளவு பொதுமக்களின் உயிர்கள் இழக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் மற்றும் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்குதல் ஆகியனவே தற்போதைய இன்றியமையாத தேவை என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் இராணுவத் தந்திரோபாயங்கள் சில நாட்டு அரசாங்கங்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். இலங்கை யுத்தத்தில் அதிகளவு பொதுமக்களின் உயிர்கள் இழக்கப்பட்டமைக்கு புலிகளே பொறுப்பு சொல்ல வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். யுத்த வலயத்திலிருந்த பொதுமக்களை பாதுகாப்பாக விடுதலை செய்வதற்கு புலிகள் தவறியதாகவும், இதன் மூலம் புலிகள் சர்வதேச சட்டங்களை மீறிச் செயற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பொதுமக்களை தெற்கு நோக்கி நகர்வதற்கு புலிகள் அனுமதித்திருந்தால் பாரியளவு உயிர்ச் சேதங்களை தவிர்த்திருக்கு முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் நிலைகளிலிருந்து படையினர் மீது தாக்குதல் நடத்தி, பதில் தாக்குதல்களின் மூலம் பொதுமக்களுக்கு இழப்புக்களை ஏற்படுத்த புலிகள் திட்டமிட்டு செயற்பட்டதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுமக்கள் இழப்புக்களை காரணம் காட்டி சர்வதேச சமூகத்தைக் கொண்டு அரசாங்கப் படையினரின் முன்நகர்வுகளை தடுத்து நிறுத்த புலிகள் முயற்சித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட வேண்டிய அதேவேளை பொதுமக்கள் உயிர்ச் சேதங்களை அடையக் கூடாது என்பதே மேற்குலக நாடுகளின் நிலைப்பாடாக அமைந்ததென அவர் தெரிவித்துள்ளார்.இரண்டு தரப்பினரும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் பொதுமக்கள் உயிரிழப்புக்களுக்கு இரு தரப்பினரும் பொறுப்புச் சொல்ல வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். பொதுமக்கள் உயிரிழப்புக்களுக்கு பொறுப்பானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் வடக்கில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

### பல்கலைக்கழக...

ஆங்கிலக் கற்கை நெறியினை முன்னெடுக்கும் நோக்குடனேயே மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்படவுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

### சுதந்திர தினத்தில்....

யோகபூர்வமாக அறிவித்துள்ளார். பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவித்த யுத்த நாயகன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு எதுவுமில்லை என நேற்றுக் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். ஊடகவியலாளர்களின் உரிமைகள் உட்பட பல உரிமைகள் அடக்குமுறைக் குள்ளாக்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இச்செய்தியாளர் மாநாட்டில் பங்குபற்றிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி விஜேசேகர கருத்துத் தெரிவிக்கையில், சரத் பொன்சேகாவின் விடுதலைக்காக சுதந்திரத் தினத்தன்று ஐ.தே.க. மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டமொன்றை நடத்தும் எனக் கூறினார். பல் வேறு அமைப்புகளும் இப் போராட்டத்தில் இணைந்து கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

## மரண அறிவித்தல்



### திருமதி. திருப்பதி செல்லத்துரை

யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும், (வீரமாகாளி அம்மன் கோவிலடி) வதிவிடமாகவும் கொண்டு 22A, கற்குழி வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி திருப்பதி செல்லத்துரை அவர்கள் 31.01.2011 திங்கள் இரவு சிவபதமடைந்தார். அன்னார் காலம் சென்ற முதலியார் கதிரவேலு வள்ளியம்மை தம்பதியினரின் அருமை மகளும், காலம் சென்ற திருவாளர் செல்லத்துரை (உள்ளக கணக்காய்வாளர்) அவர்களின் அன்பு மனைவியாரும், காலம் சென்ற சதானந்தம் (புகையிரத கட்டுப்பாட்டாளர்) அவர்களின் அன்புச் சகோதரியும், திருவாளர் வைரமுத்து (முன்னாள் உரிமையாளர் திருப்பதி ஹார்ட்வெயார்ஸ்), தனபாலசிங்கம் (லண்டன்), பரராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், திலகவதி, மாலினி (லண்டன்), ராணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், றிஜிக்காந்த், ரவீந்திரநாத், மிராளன், சுதர்ஷனா, வித்தியா, யாழினி, ரஜீவன், விஜிதா ஆகியோரின் அன்புப்பேத்தியும், அஸ்வினி, விதுஷேன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் கற்குழி வவுனியா இல்லத்தில் 03.02.2011 வியாழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
செ.வைரமுத்து
(மகன்)

தொடர்புகட்கு:
024.2221608
(C/503)

யாழ்.மாவட்ட மக்களுக்கு
SEC
ஷாலோம்
SHALOM
உங்கள் கனவு இல்லங்களையும் ஏனைய கட்டிடங்களையும் மாவட்டத்தின் எந்தப் பகுதியிலும் அழகுற நிர்மாணித்துக்கொள்ள SHALOM நிர்மாணப் பொறியியலாளர்கள் உறுதியான உத்தரவாதமளிக்கிறார்கள்.
குறிக்க தவணைக்குள் .... குறைந்த செலவில்.... நவீன முறையில்...
SHALOM வழங்கும் நற்செய்தி...!
வீடுகள்-கட்டிடங்கள் அனைத்தையும் அமைத்துக்கொள்ளவும் மாபிள் - ரெறாசோ வேலைகளை நேர்த்தியாக அழகுற செய்துகொள்ளவும் நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்
SHALOM
20/1, 2வது ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/418)
தொலைபேசி : 0217901798 - 0771044861
தீவகத்தில்
SHALOM,
சிற்பன வீதி,
வங்களாவடி,
வேலணை.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 பெப்ரவரி 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.